ACC-TNA
00212

# புதுக்கோட்டை ஸமஸ்தான
# தேசீய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1942-ம் ஞூ மேமீ 16௳ [ந. 95

பிரஸங்கம் XCV.

## தேசீய யுத்த முன்னணி.

I

(மேன்மை தங்கிய வைஸிராய் ரேடியோ மூலம் செய்த ஒலிபரப்பு.)

இந்தியாவின் ராணுவ பலமும் விமானபலமும் தினம் விருத்தியாகி வருகிறது. ஒப்பற்ற சேனாதிபதியிடம் நம்பிக்கை வைத்து நமது படைகள் ஒப்படைக்கப் பட்டிருக்கின்றன. இணையற்ற முறையில் இவைகள் எதிரியைத்தாக்கும்.

எங்களிடம் ஆயுதம் இல்லையே என்று மீதமுள்ள பொதுமக்கள் கேட்கலாம். நாங்கள் திருப்திகரமாக எவ்விதம் நடந்து கொள்ளமுடியும் என்றும் வினவலாம். ஆனால் பொதுநன்மையை உத்தேசித்து தோளோடு தோள் கொடுத்து உழைத் தால் தான் சரியாக நடந்து கொண்டதாக ஆகும் என்றே நான் சொல்லுவேன்.

"எங்களிடம் ஆயுதமில்லையே நாங்கள் என்ன செய்யக்கூடும். கவர்ன் மெண்டார் ஆயுதத்தைக் கொடுத்தால் இந்தியப் பாதுகாப்பிற்காக முன் வருவோம்" என்றும் சிலர் சொல்லுவதை நான் கேட்டிருக்கிறேன்.

இதற்கு நான் கொடுக்கக் கூடிய பதில் இதுதான்.

1940-ம் ஞூ ஜூன் மாதத்தில் பிரிடனில் ஜனங்களிடம் ஆயுதமிருந்ததா? 1941-ம் ஞூ ஜூன் மாதத்தில் ருஷ்யர்கள் ஆயுதம் கொண்டிருந்தனரா? பொறுக்க முடியாத நிலைகளில் சைனாவில் சாமானியமானவர்களிடமெல்லாம் ஆயுதமிருந்ததா? இல்லை. எந்ததேசத்திலும் எவ்விதமான நவீன யுத்தத்திலும் பொதுமக்கள் ஆயுதம் தரித்ததில்லை.

எதிரி முன்னேறிக்கொண்டே போகும் போது அவனுக்குப்பின்னால் இருந்து கொண்டு அவனது ஸப்ளை முதலியவைகளைத் தடுக்கலாம். ஆனால் இதற்கும் முன்னாடியே பயிற்சி பெற்றிருக்கவேண்டும்.

ஆயுதங்கள் கிடைத்ததும் இவ்வித யுத்தமும் செய்யப்படும். அதுவரை கொஞ்சமும் தயக்கமன்னியில் சைனியம் விருத்தி செய்யப்பட்டு வருகிறது. அவ்விதம் தயாராகும் சிப்பாய்களுக்கு எல்லாவித நவீன ஆயுதங்களும் தேவையாக இருக்கிறது.

## ஜனங்களின் உணர்ச்சி.

சரி, ஆயுதமில்லாத நாங்கள் என்ன செய்ய முடியுமென்று கேட்கலாம். இந்த சந்தர்ப்பத்தில் ஜெனரல் வேவல் என்ன சொன்னாரோ அதையே நானும் திரும்ப ஞாபகப்படுத்துகிறேன். நவீன யுத்தத்தில் வெற்றியளிக்கக் கூடிய அம்சங்களில் ஜனங்களின் உறுதியும் கட்டுப்பாடும்தான் முக்கியமானவை.

இது நம்மிருவருடைய பொறுப்பு. அதனால் தான் தேசிய யுத்த முன்னணியில் சேரும்படி அழைக்கிறேன்.

இந்த முயற்சியை எந்தப் பெயரால் அழைத்தாலும் பாதகமில்லை.

அதன் உட்கருத்து நமக்கெல்லோருக்கும் தெரியும். பூர்ணமான ஒற்றுமையும், மதம், அரசியல் வேற்றுமைகளை மறைத்துக்கொள்ளுவதும், நாம் அடையப்போகும் லக்ஷியத்தை முன்னிட்டு யாவரும் ஒன்றுபட்டு நிற்பதும், அவ்வித லக்ஷியத்திற்கு ஒருநாளும் பயமில்லை யென்று நினைப்பதும்தான்.

இந்தியாவில் யுத்த சேவை வேண்டுமென்று சொன்னால் மாத்திரம் போதாது. யாவரும் இணங்கி நடந்து கொள்ளவேண்டும்.

தேசிய யுத்த முன்னணி அடைவதற்கு இரு காரியங்கள் தேவை. ஒன்றுபடும் மனோபாவமும், காரியத்தில் ஈடுபடும் எண்ணமும் தான். இவைகளில் ஒற்றுமை ஏற்படுவதில் ஒரு சிரமமுமில்லை. எதிரிகளின் பிரசாரத்திற்கு உட்படாமல் இருந்தால் நமது லக்ஷியங்கள் மேன்மையானவை என்று யாவரும் நம்புவார்கள்.

69406

## தேசிய யுத்த முன்னணியின் முக்கிய நோக்கங்கள்.

இந்த அணியில் சேருகிறவர்கள் பின்கண்டவைகளை முக்கிய வேலைகளாக வைத்துக்கொள்ள வேண்டும்.

1. பொது ஜனங்களுக்கிடையே கட்டுப் பாட்டை வளர்த்தல்; எதிரியை எதிர்க்கும் சக்தியை வளர்த்தல்.

2. கலவரத்தை உண்டு பண்ணக்கூடிய விதமாக பேசுகிறவர்களையும், எழுதுகிறவர்களையும், இன்னும் இதர ஐந்தாம் படையினரையும் அடக்குவது.

3. ஜனங்களிடையே நம்பிக்கையையும் தைரியத்தையும் வளர்த்தல்.

4. நாஸிகளையும், பாஸிஸ்டு கக்ஷியினரையும் உலகில் எந்த பாகத்திலிருந்தாலும் அடியோடு ஒழியும் வரை எதிர்க்கவேண்டுமென்ற எண்ணத்தை உண்டு பண்ணுவதும்தான்.

தங்களுடைய கொள்கைகளுக்கும் லக்ஷியங்களுக்கும் ஒருவித இடைஞ்சலுமன்னியில் இவ்வேலையில் யாவரும் ஈடுபடலாம்.

## நீங்கள் செய்யக்கூடியது யாது?

“நானென்ன செய்யவேண்டும்”? என்று உண்மையாகவே ஒன்றும் தெரியாமல் சிலர் கேட்கின்றனர்.

இந்த யுத்தகாலத்தில் மனிதன் செய்யக்கூடியதெல்லாம் யுத்தத்திற்கு சாதகமாகத்தானாகும், சும்மா இருந்தால் கெடுதிதான்.

ராணுவத்தில் சேர விரும்புவோர்க்கு “உடனே ராணுவத்தில் சேருங்கள்” என்று சொல்லுகிறேன்.

மற்றவர்களுக்கு இதர துறைகளில் ஊழியம்செய்ய அவகாசம் இருக்கிறது. பொதுஜன பாதுகாப்புப் படைக்கு வார்டன்கள், டாக்டர்கள், நெருப்பு அணைக்கும் கோஷ்டிகள், நர்ஸ்கள், மற்றும் உதவியளிக்கக்கூடியவர்கள் தேவையாக இருக்கிறது. உள்நாட்டுப் பாதுகாப்புப்படைக்கு ஆட்கள் தேவையாக இருக்கிறது.

ஆஸ்பத்திரிகளிலும் ஆபீஸ்களிலும், துருப்புகளுக்கு சாமான்கள் அனுப்பவும் ஸ்திரீகள்தேவை. தப்பி ஓடிவருவர்களுக்கும் உதவிபுரியவேண்டியிருக்கிறது.

நமது தினசரி வாழ்க்கையை கவனிப்போம். பொருள், உணவு, உடை, மின்சாரம், பெட்ரோல், நிலக்கரி முதலியவைகளை வீணில் செலவழிக்கிருேம். இப்படிச் செய்தால் வெற்றிக்குத்தடைதான்.

தேவையில்லாத சமயத்தில் நாம் பிரயாணம் செய்து துருப்புகள், யுத்த தளவாடம் இவைகளின் நடமாட்டத்தைக் குறைக்கிருேமா, அப்படிக் குறைக்காவிடில் நமக்குத்தான் கெடுதி.

குடியானவர்கள் அதிகமாக தானியங்களை உண்டுபண்ணமுடியாதா? தொழிற்சாலையில் வேலைசெய்கிறவர்கள் அதிக உற்பத்தியில் கவனம் செலுத்தக்கூடாதா?

வெற்றியை துரிதப்படுத்தும் நோக்கமிருந்தால் பணக்காரன், ஏழை, உத்தியோகஸ்தர், குமாஸ்தா, வியாபாரி, வேலையாள், குடும்ப ஸ்திரீ, யாராலும் பொறுப்புடன் நடந்துகொள்ளலாம்.

தினசரி வேலைகளில் ஈடுபடுவதோடு உத்சாகமாக வெற்றியை முன்னிட்டு நடந்துகொள்ளவேண்டும். எதிரிகளின் பயமுறுத்தல்களுக்கு உட்படக்கூடாது.

இந்த யுத்தம் நடக்கும் ஒவ்வொரு நாளும் ஏராள மனிதர்களும், பொருள்களும் நஷ்டமாகும் என்பதை உணரவேண்டும். ஆகவே யுத்தத்தை சீக்கிரம் முடிக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

## முன்னேறித் தாக்குதல்.

ஒற்றுமையை வளர்த்துக்கொண்டு முன்னேறிப் போர் நடத்தவேண்டும். தற்காப்புப் போரும், பின்வாங்குவதும் வெற்றியைத் தரா.

பயந்தவர்களையும், பொய் வதந்திகளைப் பரவச்செய்கிறவர்களையும் தாக்குவோம். முன்னேறிப் போர்செய்யவேண்டுமென்ற சிந்தனையிருக்கவேண்டும்.

நாம் நினைப்பவைகளெல்லாம் தர்மமாக இருந்து அவைமிஞ்சியிருந்தாலும், நமது ஆசைகள் குன்ருமல் இருந்தாலும் நமக்கு வெற்றிகிடைப்பதென்பது நிச்சயம். நேசநாடுகளிடமுள்ள சாமான்களைக் கொண்டே இந்த யுத்தத்தை ஜயித்துவிடலாம்.

நாம் வெற்றி பெறுவதற்கும், பெருமலிருப்பதற்கும் நாம்தான் காரணம். ஆகவே இந்தியாவிலும் தேசீய யுத்த முன்னணியை ஆரம்பிப்போம். இன்னும் சமயம் இருக்கிறது. கடைசியாக எனது மனைவி சமீபத்தில் சொன்ன மொழிகளுடன் நான் முடித்துக்கொள்ளுகிறேன் :—

"இந்த யுத்தத்திற்கு நீங்கள் செய்த கைங்கரியம் எப்பேர்ப்பட்டதென்று நீங்களே நினைத்துக்கொண்டு ஆறுதலடையுங்கள்."

## II

## 'தேசீய யுத்த முன்னணியில் யாவரும் இப்பொழுதே சேரவேண்டும்.'

இனிமேல் வரப்போகும் சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு நடந்துகொள்ள இதுதான் தருணம். விவேகமுள்ள மனிதர்களைப்போல் நடந்துகொண்டு உலகின்கண் இந்தியாவிற்கு புதிய புகழைச் சம்பாதித்துக்கொடுக்க இதுவே சமயம்

தேசீய யுத்த முன்னணி என்றால் என்ன?

(1) சந்தா விகிதங்களை ஏற்படுத்திக்கொண்டு வெளிப்படையாக ஸ்தாபிக்கப் படும் ஒரு சங்கமல்ல. ஆனால் மனப்பூர்வமாக மனிதர்கள் ஈடுபட்டு இந்தியாவின் கௌரவத்தையும், ஒற்றுமையையும் ஏற்படுத்தி, ஸ்திரீகளையும் குழந்தைகளையும் காப்பாற்றி ஒற்றுமையை ஸ்தாபிக்கும் இயக்கமாகும்.

(2) இது ஒரு அரசியல் ஸ்தாபனமுமல்ல, அரசியலைப்பற்றியோ, அரசாங்க அமைப்பைப்பற்றியோ தனக்கு விருப்பமான எவ்விதமான அபிப்பிராயத்தையும் கொண்டிருக்கலாம். அப்படி இருந்தாலும், தேசபக்தி மாத்திரம் பெற்றிருந்தால் தேசீய யுத்த முன்னணியில் சேர்ந்துகொள்ளலாம்.

(3) இது தேசீய யுத்த சம்பந்தமான முன்னணி, அவரவர்களின் ஜாதிக்கும் மதத்திற்கும் இங்கே ஒருவித சம்பந்தமுமில்லை. இந்தியாவின் மகிமை ஓங்கி, வளமும், ஸ்வதந்திரமும் விளங்கவேண்டுமென்று நினைத்தால் தேசீய யுத்த முன்னணியில் சேர்ந்துகொள்ளலாம்.

(4) இதுவும் ஒரு போர்முனைதான். யுத்த சமயத்தில் தான் அவரவர்களின் தைரியத்தையும் உறுதியையும் காண்பிக்கமுடியும். இந்த தேசீயப்போர் முனையில் சேர்ந்துகொள்ளுவோருக்கு பயமும், சஞ்சலமும் வேண்டியதில்லை. அவைகளுக்கு எல்லாம் தற்சமயத்தில் தேவையே இல்லை.

(5) பயந்தாங்குள்ளித்தனத்தைப் போக்கடிப்பதும், பயத்தை உண்டுபண்ணும் பிரசாரத்தைப் பரவவிடாமல் தடுப்பதும், பொதுஜனங்களுக்கு தைரியத்தை நிலைநாட்டுவதும் தான் முக்கிய லக்ஷியங்கள்.

சைனாவில் ஜப்பானியர் செய்த காட்டுமிராண்டிச் செய்கைகளை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு அது மறுபடி இங்கே நடக்காமல் பார்த்துக்கொள்ளவேண்டும். இது சம்பந்தமாக சயாங் கை ஷேக்கின் மனைவி சொல்லுவதை செவிகொடுத்துக்கேளுங்கள் :—

"எதிரியின் கொடுமைகளை நாம் தெரிந்துகொண்டவுடன் நாமும் சண்டை செய்ய நேர்ந்தது. நாம் தயாராக இல்லாமலிருப்பது என்பது உண்மைதான். யுத்தம் செய்தால் அதோடு இறப்பு முதலிய கெடுதிகள் வருவதென்பதும் நிச்சயம். ஆனால் எதிரிக்குட்பட்டால் உடல், ஆவி இரண்டுக்கும் அவஸ்தையைச் செய்யக்கூடிய அடிமைத்தனம் வரும்."

ஆகவே காட்டுமிராண்டிகளுக்கு இந்தியாவை ஒப்படைக்க நாம் தயாராக இல்லை.

உலகத்தின் கவனமே இந்தியாபேரில் செலுத்தப்பட்டிருக்கிறது. தைரியம் வாய்ந்த பெரிய மனிதர்களுடன் சேர்ந்துகொண்டு சண்டையை நடத்துகிறோம். உதாரணமாக சைனா, ருஷ்யா இவைகளின் தீரத்தைப் பாருங்கள். அந் நாட்டினரைப்போல் நாமும் நடந்துகொள்ளுவோமாக.

இவ்வித இயக்கத்தில் சேர இதுவே தருணம். ஏனென்றால் சண்டை நமது அண்டைக்கு வந்துவிட்டது. அதுதான் ஆபத்து. நாம் உறுதியுடனிருந்தால் நிச்சயம் சமாளித்து வெற்றிபெறுவோம். மார்ஷல் சயாங் கை ஷேக் சொல்லும் விதமாக 'மனித வர்க்கத்தின் வருங்காலம் தற்சமயம்தான் தீர்மானிக்கப்பட வேண்டியிருக்கிறது.' நாம் தீர்மானத்துடனும் திடமான மனதுடனும் இருக்க வேண்டும்.

பயந்தாங்குள்ளித்தனத்தைப் போக்கடியுங்கள். கலவரத்தைச்செய்யும் திடீர் வதந்திகளை அடக்குங்கள். தாங்கள் தாக்கப்போகும் தேசத்தில் முதலில் பயத்தை உண்டுபண்ணுவதென்பது அச்சு நாட்டினரின் வழக்கம். அதற்கு நாம் இசைந்துவிடக்கூடாது. தோல்வியைப்பற்றி பேசுகிறவர்களை பகிஷ்காரம் செய்யுங்கள்.

வெற்றி பெற்று, பலனை யாவரும் அனுபவியுங்கள். நிச்சயம் நாம் ஜயம் பெறுவோம். ருஷ்யா, சைனு, அமெரிக்கா, பிரிடன், இந்தியா முதலிய நாடுகளின் உதவி நமக்கு இருக்கிறது. மனித உதவியும், சாமான்களின் உதவியும், தொழிற்சாலை உதவியும் இருக்கின்றன. நிச்சயம் நாம் ஜயிப்போம். தேசீய யுத்த முன்னணியில் சேர்ந்துகொண்டு உங்களால் இயன்றதைச் செய்யுங்கள்.

## III

## 'காரியாம்சையில் செய்யவேண்டியதுபற்றிய இயக்கம்.'

1. வெற்றியைமுன்னிட்டு சிக்கனமாக இருங்கள்.
2. உணவுப்பண்டங்களை அதிகம் உற்பத்தி செய்யுங்கள்.
3. துரிதமாகவே செய்யுங்கள்.
4. வெற்றிக்காகப் பாடுபடுங்கள்.
5. யுத்த சேவையைச் செய்ய முன்வாருங்கள்.
6. வதந்திகளை அடக்குங்கள்.
7. உங்களையும் உங்களுக்குப் பக்கத்திலுள்ளோரையும் காப்பாற்றிக் கொள்ளுங்கள்.

## IV

## உணவுப் பொருள்களை அதிகப்படுத்தும் இயக்கம்.

(புதுக்கோட்டை தர்பாரவர்களின் பிரஸ் கம்யூனிகே.)

இந்தியாவுக்கு உணவுப்பொருள்களை அனுப்பிவந்த வெளிநாடுகள் எதிரி வசமானதினுலோ, அல்லது கப்பல் போக்குவரத்துக் குறைவினுலோ, அல்லது பிரயாணத்தில் ஏற்படக்கூடிய அபாயத்தால் இனி அந்த நாடுகள் உணவுப் பொருள்களை அனுப்ப முடியாததினுலோ, மேற்படி நாடுகளை எதிர்பாராமல் இந்தியாவில் அதிகமான உணவுப்பொருள்களைப் பயிரிடவேண்டிய அவசியம் யுத்தத்தினுல் ஏற்பட்டுவிட்டது.

சிலகாலமாக ஸமஸ்தானத்தில் சாகுபடி விஸ்தீர்ணம் குறைந்துவருகிறது. விவசாயிகள் குறைவாக இருப்பதுதான் இதற்கு முக்கிய காரணமென்று தோன்றுகிறது. காலம் சுபிக்ஷமில்லாமலிருந்திருக்கலாம். ஆனுல் அப்படி விபரீதமாகயிருக்கவில்லை. காலம் சுபிக்ஷமில்லாமலிருப்பது இங்கு வழக்கந்தான். இப்பொழுது அக்கரை தேசம் சென்றிருந்தவர்களில் பலர் தங்கள் சொந்த ஊர்களுக்குத் திரும்பி வந்திருப்பதாலும், இலங்கைக்கு கூலிகளை அனுப்புவது நிறுத்தப்பட்டுவிட்டதாலும், இங்கு விவசாயம் செய்யத் தயாராக அதிகமான ஜனங்கள் இருக்கலாம்.

தரிசு நிலங்களை அடமானம் செய்வதற்கு கவர்ன்மெண்டார் குடிஸ்வாமியம் விதிப்பதில்லை. தவிர அடமானம் செய்த முதல் வருஷத்தில் நிலத்தின் தீர்வையில் மூன்றில் ஒரு பங்கும், இரண்டாவது வருஷத்தில் மூன்றில் இரண்டு பங்குமே கவர்ன்மெண்டார் வசூலிக்கிருர்கள். பூராத் தீர்வை மூன்றும் வருஷத்திற்கு முன் வசூலிப்பதில்லை. காலம் சுபிக்ஷமாயில்லாவிடில் நஞ்சை நிலங்களுக்கு வரி வஜா தாராளமாய் கொடுக்கப்படுகிறதென்பது உங்களுக்குத் தெரிந்ததே. இந்த யுத்தம் முடியும்வரை கவர்ன்மெண்டாரின் உத்தரவு பெற்று நீர்பாய்ச்சி புஞ்சை நிலங்களில் உணவு தான்யங்களைப் பயிரிட்டால் அவைகளுக்கு நீராணிக்கம் விதிக்கப்படமாட்டாது.

விதைகளை வாங்கின விலைக்கு விற்றோ, அல்லது நல்ல விதைகளை வாங்க கடன்கள் கொடுத்தோ விவசாயிகளுக்கு உதவி செய்ய கவர்ன்மெண்டார் எப்பொழுதும் தயாராக இருக்கிறார்கள். உரம் வாங்கவும், கேணிகள் வெட்டவும், உழவு மாடுகள் வாங்கவும், செய்நேர்த்தி செய்யவும் குறைந்த வட்டிக்குக் கடன் கொடுப்பார்கள்.

டவுனில், ஓர் விவசாய நிபுணரின் பார்வையில் கவர்ன்மெண்டார் ஓர் விவசாயப் பண்ணை வைத்திருக்கிறார்கள். தவிர சுற்றுப்பிரயாணம் செய்யும் விவசாய போதகர்கள் இருவர் இருக்கின்றனர். விவசாய சம்பந்தமாகத் தேவையாயிருக்கும் யோசனைகளை குடிகளுக்கு அவர்கள் சொல்லிக்கொடுக்கிறார்கள்.

இந்த ஸாதனங்களைப் பயன்படுத்திக்கொண்டு இன்னும் அதிகமான நிலங்களை சாகுபடிக்குக் கொண்டுவரவும், மிக மிக அதிகமாக உணவு தான்யங்கள், காய் கறிகள், பழவகைகள் இவைகளைப் பயிரிடவும் குடிகளுக்கு சந்தர்ப்பம் வாய்ந்து இருக்கிறது.

கடைசியாக கைக்குத்தரிசியைப்பற்றி ஓர் வார்த்தை. ஜனங்கள் மிஷின்களில் அறைத்த அரிசியையே வெகுவாக உபயோகிக்கிறார்கள். கைக்குத்தரிசியே மிகுந்த ஆரோக்கியமானதென்று டாக்டர்கள் சொல்லுகிறார்கள். மிஷின்களில் அறைத்த அரிசி சாப்பிடுவதை நிறுத்தி கைக்குத்தரிசியை உபயோகித்து ஜனங்கள் தங்கள் தேக ஆரோக்கியத்தை விருத்தி செய்துகொள்ளுவார்களென்று ஈ-தர்பார் அவர்கள் நம்புகிறார்கள்.

---

# வார யுத்தச் செய்திகள்.

---

## 9—5—42-லிருந்து 15—5—42-வரை.

**பர்மா.**—லாஷியோ எதிரி வசமானதிலிருந்து ஜப்பானியப் படைகள் சைனாவின் எல்லைப்புறத்தைக் கடந்து வான்டங், செபாங், லுங்லிங் முதலிய பட்டணங்களை நோக்கி முன்னேறிச் சென்றன. இதுவரை யுனான்மாகாணத்தில் லுங்லிங் வரை தான் முன்னேறியிருக்கின்றனர். இது சுங்கிங்கிற்கு வடகிழக்கில் 40 மைல் தூரத்திலும், பர்மா எல்லையிலிருந்து 60 மைல் தூரத்திலும் இருக்கிறது. சிண்ட்வின் நதிக்கரையில் யேவு (yeu) வரையிலும் முன்னேறியிருக்கின்றன. ஷவிபோ தாக்கப்பட்டுள்ளது. ஸால்வீன் முனையில் குங்ஷினும் தாக்கப்பட்டுள்ளது. யேவுக்கு வடக்கே பிரிடிஷ் படைகள் பின்வாங்கியிருக்கின்றன. குறுக்கு எதிர்ப்புகளைச் செய்து செப்பாங்கையும் மெய்மோவையும் சீனர்கள் பிடித்துள்ளனர். லாஷியோவிற்கும் மாண்டலேக்கும் இடையிலுள்ள இருப்புப்பாதையையும் துண்டித்துள்ளனர். சீனர்களின் தந்திரப்படி தொடர்ந்து தாக்கி எதிரிக்கு சீர்திருத்திக்கொள்ளவும், சிரமப் பரிகாரம் செய்துகொள்ளவும் அவகாசம் கொடுக்காமல் இருப்பது தான் நோக்கம்.

மே மாதம் 10௳ சனிக்கிழமை வெளிவந்த சீன அறிக்கையிலிருந்து இவ்வாரத்திய சண்டைகள் தெரியவருகின்றன.

"லாஷியோவைப் பிடித்துக்கொண்ட பிறகு யுனான் மாகாணத்தை நோக்கி ஒரு ஜப்பானியச் சைனியம் முன்னேறியது. மற்றொன்று லாஷியோ–மாண்டலே ரஸ்தாவை ஆக்கிரமித்துக்கொள்ளச் சென்றது. அதே சமயத்தில் மாண்டலே பிரதேசங்களிலிருந்து சீனப் படைகள் பின்வாங்க முடியாமலும் செய்யப்பட்டது.

"இதற்குள்ளாக ஜப்பானியருக்குப் பின்புறமாக இருந்த சீனப் படைகள், முக்கியமாக டௌங்கியைப் பிடித்த படைகள் சண்டை செய்தன. இப்படைப் பகுதி வடக்கு நோக்கி முன்னேறி மே 6௳ லாஷியோ–மண்டலே இருப்புப்பாதை

யில் மெய்மியோவைப் பிடித்துக்கொண்டன. இதே சமயத்தில் யுனன் மாகாணத்தில் சீனப் படை செபாங் (Chehfang) கிர்குக்கு வடகிழக்கில் ஜப்பானியரை சைனுவிற்குள் பிரவேசிக்கவிடாமல் தாக்கியது.

"மெய்மியோவிலிருந்து சீனப்படை வடக்கே முன்னேறி லாஷியோவிலிருக்கும் ஜப்பானியரைப் பின்புறமாகத் தாக்கப்பார்க்கிறது. இதன் பயனுக ஜப்பானியப் படைகள் அடைபடும்போல் இருக்கிறது. இன்னும் சிலநாட்களில் ஜப்பானியப் படையே கலேக்கப்படலாம்

"பர்மா ரஸ்தாவில் போஷானிலிருந்து கிடைக்கும் தகவல்களைப் பார்த்தால் யுனனில் சீனர்களின் தாக்குதல் வெற்றிகரமாக இருக்கிறது. பர்மா ரஸ்தா வழியாக ஜப்பானியர் முன்னேறும்போது அதிக நஷ்டமடைந்தனர்.

"சீனர்களுக்கு இருபக்கங்களிலும் வந்த ஜப்பானியப் படைகளில் ஒன்று அழிக்கப்பட்டது. மற்றென்றும் சீனப்படையைப் பிளந்துசெல்ல யத்தனித்த போது சிதறிவிட்டது.

"சீனர்கள் தங்களுடைய தாக்குதலேச் செய்தே வருகின்றனர்".

கல்கத்தாவிலிருந்து ரெங்கூனுக்கு முன்பு இருந்த விமான மார்க்கத்திலுள்ள அக்யாப்பில் ஜப்பானியப் படைகள் பிரவேசித்தன. இந்த இடம் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததல்ல. ஏனென்றால் அரகான் கடற்கரையில் தனியே நிற்கிறது.

**சைன.**—கிழக்குப்பக்கமாக சீனப்படைகள் முன்னேறி ஷாங்கெய், நான்கிங், ஹாங்கௌ, நின்சாங், நின்கோ, அமாய் முதலியவைகளேத் தாக்கினர்கள். தென் கிழக்கு சைனுவில் செகியங் மாகாணத்தை ஜப்பானியத் துருப்புகள் தாக்கி வருகின்றன. தெற்கு நோக்கியும், தென்மேற்குப் பக்கத்திலும் ஸயாஷான், ஷாவோஷின் மூலமாக இரண்டு எதிரிப்படைகள் ஒரே சமயத்தில் முன்னேறி வருகின்றன. யாங்கிஸி நதியிலுள்ள இசாங் துறைமுகத்தை சீனர்கள் தாக்கினர்கள்.

**இந்தியா.**—வெள்ளிக்கிழமையும், சனிக்கிழமையும் ஜப்பானிய விமானங்களிலிருந்தும் யந்திர பீரங்கிகளேக்கொண்டும் சிட்டகாங்கில் தாக்குதல் செய்யப்பட்டது. சேதம் கொஞ்சம்தான். சிலரே இறந்தனர். வங்காளக்குடாக் கடலில் ஸிலோன் தாக்கப்பட்டபிறகு, சில நீர்மூழ்கி நடமாட்டங்களேத் தவிர வேறு எதிரி கப்பல்களின் நடமாட்டம் இல்லே. கென்யா, உகாண்டா, டங்கனீகா நயாஸாலாண்டு, ஸான்ஸிபார், வட ரொடெஷியா முதலிய இடங்களிலிருந்து உதவிப்படைகள் வந்திருக்கின்றன. அமெரிக்க விமானங்களும் பிரிடிஷ் விமானங்களும் ஏராளமாக வந்திருக்கின்றன. ஏற்கனவே 15 லக்ஷம் துருப்புகள் கொண்ட இந்தியச் சைனியம் மாதம் 50,000 வீதம் விருத்தியாகிக்கொண்டே போகிறது.

**பவளக்கடலில் நடந்த கப்பற்சண்டை.**—இவ்வாரத்தில் இக்கடலில் நடந்த சண்டையில் அதிக வெற்றி கிடைத்தது. ஜப்பானியப்படையுடன், பிரிடிஷ், அமெரிக்கப் படைகள் ஈடுபட்டன. மே 4-ம் தேதி முதல் பிஸ்மார்க் ஆர்ச்பிலாகோவிற்கு தெற்கிலும், மே 9-ம் தேதியும் இச்சண்டை நடந்தது. இதில் ஜப்பானியருடைய 18 கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. நான்கு சேதமாயின. இதன் இரண்டு விமானமேற்றும் கப்பல்கள், ஒரு க்ரூயிஸர், 6 அல்லது 7 நாசகாரிகள் அடங்கியிருக்கின்றன. ஆனல் இச்சண்டையைப்பற்றி ஜப்பானியர் கொடுக்கும் விவரம் நம்ப முடியாதவிதமாக இருக்கிறது. உண்மையாதெனில் இங்கே அடைந்த தோல்வியால் ஜப்பானியர் பேர்ல் துறைமுகத்தைத் தாக்கியதற்கும் பிரின்ஸ் ஆப்வேல்ஸ், ரிபல்ஸ் என்ற கப்பல்களே அமுக்கியதற்கும் அவர்களுக்குத் தகுந்த பதில் கிடைத்தது. இதனல் ஆஸ்திரேலியாவில் ஜப்பானியரால் சுலபமாக இறங்கமுடியாது. பூராவாக எதிரி தோற்கடிக்கப்படாத போனலும் இதை ஒரு முக்கிய சம்பவமென்றே சொல்லலாம்.

**லிபியா.**—எப்போதைப்போல் காவல் வேலை நடைபெறுகிறது. மாதக் கணக்கில் செய்த முயற்சிகளால் மத்தியக்கிழக்கின் தற்காப்பையும் போக்கு வரத்தையும் பலப்படுத்த முடிந்தது. ட்ரிபோலிக்கும், ஹைபாவிற்குப் இருப்புப் பாதை போடப்பட்டுள்ளது.

ஸைப்ரஸ், மால்டா, துருக்கி. ஸிரியா, டிரான்ஸ் ஜார்டன், பாலஸ்தீனம், எகிப்து, ஸுடான், இரிட்ரியா, எதியோபியா, கிழக்கு ஆபிரிக்கப் பிரதேசங்கள், ஸாடி அரேபியா, ஏடன், இராக், பெர்ஸியா முதலிய இடங்களுக்கு சாமான்களைச் ஸப்ளை செய்ய ஏற்படுத்தப்பட்ட கமிட்டி கெய்ரோவில் கூடுகிறது. மிஸ்ட்டர் கேஸி தலைமை வகிக்கிருர். உணவு ஸப்ளை, கப்பல்கள், உள்நாட்டுத் தொழிற்சாலை முதலியவைகளின் சம்பந்தமான பிரச்னைகள் சரிச்சை செய்யப்படும்.

**மால்டா.**—ஏராளமான பிரிடிஷ் விமானப்படை வந்ததிலிருந்து மால்டா அதிகமாக பாதுகாக்கப்பட்டிருக்கிறது. இதனுலேயே சனிக்கிழமையிலும், ஞாயிற்றுக்கிழமையிலும் ஜெர்மன் விமானங்களில் 29 நேசமாயின. 27 அநேக மாகச் சேதமடைந்திருக்கும். 37 சேதமாயின.

**ருஷ்யா.**—மாரிகாலம் ஆரம்பித்ததுமுதல் நாஸிகளின் முன்னேறிப்போர் தற்போதுதான் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக பிரஸ்தாபப்படுகிறது. மர்மான்ஸ் முனையில் ருஷ்யத் தாக்குதல் கடுமையாக இருக்கும் காரணத்தால் ஜெர்மன் விமானங்கள் அங்கிருந்து அழைக்கப்பட்டிருக்கின்றன. இது ருஷ்யர்களுக்கு ஒரு சாதகமான அம்சம். நீப்ரோபெட்ரோவ்ஸ்க்லிருந்து கெர்ச் தீபகற்பம் வரையிலுள்ள 250 மைல் போர்முனையில் 24 கவசமணிந்த நாஸி யந்திரப் படைகள் ஈடுபட்டிருக்கின்றனவாம். கெர்ச் தீபகற்பத்தில் ருஷ்யர்களை எதிர்த்து செய்யப்பட்ட தாக்குதல் கொஞ்சம் வெற்றிகரமாக இருக்கிறதாம். ஆனுல் மற்ற இடங்களில் நாஸிகளுக்கு தோல்வி ஏற்பட்டிருக்கிறது. இந்த யுத்தம் கடுமை யாகவே நடத்தப்படுகிறது. ஜெர்மன் சைனியங்களுக்கு டாங்கிப்படையும், பாய்ச்சல் பாம்பர்களும் துணையாக வருகின்றன. ஆனுல் இது ஒரு பெரிய யுத்த மென்று சொல்லமுடியாது. ஏதோ திடீர் தாக்குதலைச் செய்து நாஸி சைனியங் களுக்குத் திருப்தியளிக்கச் செய்யப்பட்டதாகவே கருதவேண்டும்.

**பிரிடிஷ் விமானப்படைத் தாக்குதல்கள்.**—மே 4வ கிட்னியா, போலந்து துறை முகங்கள் முதலிய இடங்களில் கப்பல்களும், துறைமுகக் கட்டடங்களும் தாக்கப் பட்டன. மே 8வ வார்னிமாண்டி தாக்கப்பட்டது. மே 8வ பர்மிங்ஹாமில் ஸர் ஆர்ச்பால்ட் பேசும்போது :—

"முன்னேறித் தாக்குவதை நேசநாடுகள் கையாண்டுவருகின்றன. நாம் முன்னேறி அடிக்கும் தருணம் வந்துவிட்டது. இதிலிருந்து பிரிடிஷ், அமெரிக்கப் படைகள் மேலும் தாக்குமென்று காணப்படுகிறது. அப்போது ஐரோப்பா பேரிலும் தாக்குதல் செய்யப்படும்.

"லுப்ட்வாபிக்கு நாசகாலம் வந்துவிட்டது. ஆகாயத்திலும், தரையிலும், நாஸி விமானப்படை பகுதி தாக்கப்பட்டுவருகிறது. தனது பலம் குன்றி வருகிற தென்பது நாஸிகளுக்குத் தெரியும். இதுதான் நமது சந்தர்ப்பம். முடிவு வரை நாம் தாக்கவேண்டும்.

"மேற்குப் போர்முனையிலும் பிரிடிஷ் விமானப்படை தனது வேலையைச் சரிவரச் செய்துவருகிறது."

## சத்துருவினுடையவும், சத்துருவினுல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 4—5—42. (திங்கட்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | பகலில்.—கப்பல் துறைகள்—லெஹாவர் (Lehavre). | | | |
| | விமான எதிர்ப்புகள்.—வட பிரான்ஸ் (France). | | | |
| | கப்பல்கள், துறைமுகத்திலுள்ள கட்டடங்கள்—டீனியா (Gdynia) (Poland). | | 7 விமானங்கள். | |
| | இரவில்.—முக்கிய தொழிற்சாலை பிரதேசம்—ஸ்டட்கார்ட் (Stuttgart). | | | |
| | ஸகோடா தொழிற்சாலைகள்.–பில்ஸென் (Pilsen) (Czechoslovakia). | | | |
| | கப்பல் துறைகள்.-நான்டிஸ் (Nantes). | | | |
| | விரோதி விமானதளங்கள்.—பிரான்ஸ் (France). | | | |
| | கப்பல்கள்.—ஹாலந்து (Holland), நார்வே (Norway) கடற்கரைகளுக்கருகாமையில். | | | |
| | விமானநிலயம்.—மான்டால் (Mandal) (Norway). | | 3 விமானங்கள். | |
| | **லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | துறைமுகம்—பெங்காஸி (Benghazi). | | | |
| | விமான எதிர்ப்புகள்—ஸிரெனேகா (Cyrenaica) வின் முன்னணிப் பிரதேசங்கள். | | | |
| | **ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்).** | | | |
| | விமானப்போர், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள், போர்முனை முழுவதிலும். | | 8 விமானங்கள். | 14 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு-நியூ பிரிடன் (New Britain)-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்)** | | | |
| | விமான நிலயம், துறைமுகம், கப்பல்கள் ராபால் (Rabaul). | | | |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma)—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).** | | | |
| | சாமான்கள் ஏற்றிச்செல்லும் படகுகளின் கூட்டம்.—நார்வே (Norway)க் கருகாமையில். | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை யெதிர்ப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| 5—5—42. (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—விமான எதிர்ப்புகள்—ஜெர்மனி ஆக்கிரமித்த பிரான்ஸ் (France). | | 6 பைடர் விமானங்கள். | 4 பைடர் விமானங்கள். |
| | ராணுவ லக்ஷியங்கள்.—ஸிப்ருஜ் (Zeebrugge). | | | |
| | இரவில்.—தொழிற்சாலைகள்—ஸ்டட்கார்ட் (Stuttgart). | | | |
| | மற்ற லக்ஷியங்கள்.—தெற்கு ஜெர்மனி (Germany). | | | |
| | விமான நிலயம்.—ஹாலந்து, பெல்ஜியம் (Low Countries), வட பிரான்ஸ் (France). | | | |
| | கப்பல் துறைகள்.—நான்டிஸ் (Nantes). | | 4 விமானங்கள். | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான எதிர்ப்புகள்.—ஸிரெனைகா (Cyrenaica) வின் முன்னணிப் பிரதேசங்கள். | | | |
| | துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர் முனை முழுவதிலும். | | 5 விமானங்கள். | 6 விமானங்கள், |
| | **தூரக்கிழக்கு-நியூ கினி (New Guinea)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). விமான நிலயம்.—லே (Lae). | | | |
| | **தூரக்கிழக்கு-நியூ பிரிடன் (New Britain)**-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). ராபால் (Rabaul). | | | |
| 6—5—42. (புதன்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பவும்**—(பிரிடிஷ் விமானங்களால்): | | | |
| | பகலில்.—விமான எதிர்ப்புகள்—வட பிரான்ஸ் (France). | | | |
| | மின்சார உற்பத்திசாலை.—கேயன் (Caen). | | | |
| | லக்ஷியங்கள்.—கலே (Calais). | | | |
| | சாயந்திரம் லக்ஷியங்கள்.—கலே (Calais), பொலாயின் (Boulogne). | | | |
| | இரவில்.—தொழிற்சாலைகள் ஸ்டட்கார்ட் (Stuttgart), தெற்கு ஜெர்மனியின் (Germany) மற்ற இடங்களில். | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
| --- | --- | --- | --- | --- |
| **6—5—42.** (புதன்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **கப்பல் துறைகள்.**—நான்டிஸ் (Nantes). | | | |
| | **விரோதி விமான தளங்கள்.**—ஆக்கிரமித்த பிரதேசங்களில். | | 7 விமானங்கள். | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | **விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்:**—போர்முனை முழுவதிலும். | | 5 விமானங்கள். | 7 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | **விமான நிலயங்கள்.**—மத்திய பர்மா (Burma). | | | |
| | **ஸாலமன் (Solomon) தீவுகள்**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | **ஜப்பானிய யுத்தக் கப்பல்கள்.**—பவளக் (Coral) கடலில். | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | **விரோதிக் கப்பல்கள்.**—லூயிஸ்டேல் (Louisdale) தீவுகள். | | | |
| **7—5—42.** (வியாழக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | **பகலில்.—கப்பல் துறைகள்**—ஆஸ்டெண்டு (Ostend). | | | |
| | **மின்சார தொழிற்சாலை.**—ஸீப்ரூஸ் (Zeebrugge). | | நஷ்டமில்லை. | |
| | **இரவில்.—யுத்தக் கப்பல்கள் துணைபுரிந்த 12 கப்பல் கூட்டம்**—டச்சு(Dutch)க் கடற்கரைக்கருகாமையில். | | 2 விமானங்கள். | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | **துறைமுகம்.**—பெங்காஸி (Benghazi). | | | |
| | **விமான எதிர்ப்புகள்.**—ஸிரெனேகா (Cyrenaica). | | 2 விமானங்கள். | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | **விமானச் சண்டைகள் தரையிலுள்ள விமானங்கள்.**—போர்முனை எங்கும். | | 26 விமானங்கள். | 71 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு—ஸாலமன் (Solomon) தீவுகள்**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | **ஜப்பானியக் கப்பற்படை பகுதிகள்.**—பவளக்கடலில் (Coral sea). | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **8—5—42.** (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—லக்ஷியங்கள்-டீப்பி (Dieppe). | | | |
| | இரவில்.—பால்டிக் துறைமுகம்—வார்னிமூன்டி (Warnemunde). | பெருந் தீக்கள் மூட்டப் பட்டன. | | |
| | விரோதி விமான தளங்கள்.—ஹாலந்து, பெல்ஜியம் (Low countries) வட பிரான்ஸ் (France). | | | |
| | ஒரு பெரிய சப்ளைக் கப்பல்.—நார்வே (Norway) கடற்கரைக்கருகாமையில். | | 19 விமானங்கள். | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | துறைமுகம், கப்பல்கள்.— பெங்காஸி (Benghazi). | ஒரு கப்பல் மூழ்கடிக்கப் பட்டது. | | |
| | விமான எதிர்ப்புகள்.—ஸிரேனைகாவின் (Cyrenaica) முன்னணிப் பிரதேசங்கள். | | | 3 விமானங்கள். |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—போர்முனை எங்கும். | | 26 விமானங்கள். | 71 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு-தென்மேற்கு பஸிபிக்**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | லூயிஸ்டேல் (Louisdale) தீபகற்பம்.— | | | 4 விமானங்கள். |
| **9—5—42.** (சனிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—லக்ஷியங்கள்— ஹாஸிப்ருக் (Hazebruck), ப்ருஜஸ் (Bruges). | | 7 விமானங்கள். | 1 விமானம். |
| | விமான எதிர்ப்புகள்.—கலே (Calais), பொலாயின் (Boulogne) பிரதேசங்களில். | | | 1 விமானம். |
| | இரவில்.—தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | | | |
| | விமான எதிர்ப்புகள்.— ஸிரேனைகா (Cyrenaica)வில். | | 6 விமானங்கள். | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—போர்முனை எங்கும். | | 18 விமானங்கள். | 25 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு—தென்மெற்கு பஸிபிக்**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | லூயிஸ்டேல் (Louisdale) தீபகற்பம். | | | |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்.—மாக்வி (Magwe). | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **10—5—42.** (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில் ரோந்து.—இங்கிலீஷ் கால்வாய் (English Channel) வட பிரான்ஸ். (France). | | | |
| | இரவில்.—தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர் முனை முழுவதிலும். | | 18 விமானங்கள். | 25 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு—ஸாலமன் (Solomon)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்.) | | | |
| | கப்பல்கள்.—கெஸ்ஸா (Kessa) | இரண்டு சாமான் ஏற்றிச் செல்லும் கப்பல்கள் தாக்குண்டன. | | |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்.—மாக்வி (Magwe) விரோதி போக்குவரத்து—வட பர்மாவில் (Barma). | | | |
| | வேவு பார்த்தல்.—ஆக்கிரமித்த பர்மா (Burma). | | | |

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **5—5—42.** (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | விரோதி விமான நடமாட்டமேயில்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | வேவு பார்த்தல்.—நியூ கினி (New Guinea) பிரதேசத்தில். | | | |
| | **பிலிப்பைன்ஸ் (Philippines) தீவுகள்**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | கரிஜிடார் (Corregidor). | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 6—5—42. (புதன்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்).** | | | |
| | இரவில்.—ஒரு இடம்.—இங்கிலாந்தின் (England) தென்கிழக்குக் கடற்கரையில். | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்).** | | | |
| | மால்டா (Malta). | | 4 விமானங்கள். | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)—(ஜப்பானிய விமானங்களால்).** | | | |
| | சொற்ப விமான நடமாட்டம்தான்.—மோர்ஸ்பி (Moresby) துறைமுகம். | | | |
| 7—5—42. (வியாழக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்).** | | | |
| | பகலில்.—ஒரு இடம்.—இங்கிலாந்தின் (England) தென்கிழக்குக் கடற்கரை. | | 1 விமானம். | |
| | இரவில்.—இரண்டு இடங்கள்.—இங்கிலாந்தின் (England) தென் கிழக்கு பாகத்தில். | | 2 விமானங்கள். | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்).** | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)—(ஜப்பானிய விமானங்களால்).** | | | |
| | மோர்ஸ்பி (Moresby) துறைமுகம். | | | |
| 8—5—42. (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்.)** | | | |
| | பகலில்.—ஒரு இடம் இங்கிலாந்தின் (England) தென்கிழக்குக் கடற்கரையில். | | 1 விமானம். | |
| | இரவில்.—கிழக்கு ஆங்கிலியா (East Anglia). | | 1 விமானம். | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)—(ஜெர்மன் விமானங்களால்).** | | | |
| | மால்டா (Malta). | | 6 விமானங்கள். | |
| | **தூரக்கிழக்கு—இந்தியா (India)—(ஜப்பானிய விமானங்களால்).** | | | |
| | சிட்டகாங் (Chittagong) பிரதேசத்தில். | | | |
| 9—5—42. (சனிக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)—(ஜெர்மன் விமானங்களால்).** | | | |
| | இரவில்.—இரண்டு இடங்கள்—இங்கிலாந்தி (England)ன் தென் கிழக்குக் கடற்கரை. | | 2 விமானங்கள். | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| 9—5—42. (சனிக்கிழமை).—தொடர்ச்சி. | | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | மோர்ஸ்பி (Moresby) துறைமுகம். | | 3 விமானங்கள். | |
| 10—5—42. (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்—ஒரு இடம் ஐர்லாந்தின் (Ireland) வட பாகம். | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | மோர்ஸ்பி (Moresby) துறைமுகம். | | | 2 விமானங்கள். |
| 11—5—42. (திங்கட்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பகலிலும், இரவிலும்.—விமான நடமாட்டமே இல்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | 10 லும், 11 லும் 101 விமானங்கள். |
| | **தூரக்கிழக்கு-நியூ கினி (New Guinea)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | விமான நிலையம்.—மோர்ஸ்பி (Moresby) துறைமுகத்திற்கருகாமையில் | மிகவும் சொற்பச் சேதம். | | |
| | **தூரக்கிழக்கு—ஆஸ்திரேலியா (Australia)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | விமான நிலையம்.—ஹார்ன் (Horn) தீவு. | | | |

---

# யுத்தக் குறிப்புகள்.

---

**நமது நிலய சம்பந்தம்.** மேன்மை தங்கிய வைஸிராய் இந்திய மக்களுக்குச் செய்துகொண்ட வேண்டுகோள் இவ்வறிக்கையின் முதலில் அச்சிடப்பட்டிருக்கிறது. அதில் கண்டபடி நமது அறிக்கைக்கு "தேசீய யுத்த முன்னணி அறிக்கை நிலயம், புதுக்கோட்டை" என்று பெயர் மாற்றப்பட்டிருக்கிறது. மற்ற விஷயங்களில் ஈடுபடுவதோடு மேன்மை தங்கிய வைஸிராய் ஆரம்பித்திருக்கும் பெரும் நோக்கங்களும் விருத்தி செய்யப்படும். இதன் பெயரில் ஏற்பட்டிருக்கும் மாறுதலை கவனிக்கும்படி நமது வாசகர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். எல்லாக் கடிதங்களையும் '**காரியதரிசி, தேசீய யுத்த முன்னணி நிலயம், புதுக்கோட்டை**' என்று விலாசம் எழுதி அனுப்பவும்.

**பர்மா யுத்தம்.** காப்டன் ஸிரில் பால்ஸ் என்பவர் மேமீ 2-ம் தேதி ஒலிபரப்பியதைப் பார்த்தால் பர்மாவில் சமீபத்தில் நடந்த யுத்தத்தைப்பற்றிய தகவல்கள் தெரியவருகின்றன.

'ரெங்கூனை ஜப்பானியர் பிடித்தபிறகு ஐராவதி, ஸிட்டாங் என்ற இரண்டு நதிகளின் பள்ளத்தாக்குகள் மூலமாக வடக்கே முன்னேறினார்கள். இந்த இரண்டு இடங்களிலும் நல்ல ரஸ்தாக்களிருக்கின்றன. ஜப்பானியர் அதிதுரிதமாக முன்னேறினாலும் நேசதேசங்கள் பின்புறமாகத்தாக்கியும், குறுக்கு எதிர்ப்புகளைச்செய்தும் அவர்களைத்தடுத்தனர். இதனால் ஜப்பானியருக்கு அதிக இடைஞ்சல் ஏற்பட்டது. தேவையானால் ஸால்வீன் நதிவரையிலும், ஸயாம் எல்லைப்புறம் வரையிலும் போர்முனையை அகலப்படுத்திக்கொள்ள ஜப்பானியருக்கு வசதியும் இருந்தது. ஆனால் சிறிதுகாலம்வரை அவர்கள் அப்படிச்செய்யவில்லை. சீனர்களும் ஸயாம் எல்லைப்புறத்தில் கொஞ்சம் படையெடுப்புகளையும் செய்தனர்.

'திடீரென்று ஏப்ரல் மாத மத்தியில் சீனர்களுக்கு இடதுபக்கமாயிருந்த ஜப்பானியர் கரினின் மாகாணத்திலிருந்து வடக்கு நோக்கி முன்னேறினார்கள். அதுவரை அங்கே சிறிய சண்டைகளே நடந்தன. டௌங்கிவரையில் அதிதுரிதமாக முன்னேறினார்கள். இங்குதான் சீனர்கள் குறுக்கு எதிர்ப்புகளைச்செய்து அந்நகரையும் திரும்பப்பிடித்தனர். ஆனால் இன்னும் கிழக்கு பாகத்தில் சீனர்களின் இடதுபக்கத்திலுள்ள படைகளின் சில துருப்புகளோடுதான் ஜப்பானியர் சண்டைசெய்ய நேர்ந்தது.

'முன்னால் கவசம்பூண்ட வண்டிகள் சென்றுகொண்டே போவதால் ஜப்பானியர் மீண்டும் வடக்கே 75 மைல்கள் ஒரு தடையுமில்லாது முன்னேறினார்கள். வரவர மாண்டலேக்கு அருகிலேயே வந்தனர். இருந்தாலும் மாண்டலேயை விட்டுவிட்டு லாஷியோவை நோக்கி முன்னேறினார்கள்.

'நமது படைகள் ஏராளமான எதிரிப் படைகளை எதிர்த்து நின்றன. முக்கியமாக நமது விமானப்படையே அதிகம் ஈடுபட்டிருந்தது. இந்த சமயத்தில் நிலைமை மிகவும் ஆபாசமாக இருந்தது. இந்த சந்தர்ப்பத்தில் ஒன்றுதான் விசேஷம். பர்மாவில் தீவ்ரமாக எதிர்த்து நின்றதால்தான் இந்தியாவில் தற்காப்புச் செய்துகொள்ளவும் அதிக முஸ்தீப்பு செய்துகொள்ளவும் அவகாசம் கிடைத்தது.

'இதனாலேயே, ஜப்பானிய பிரதம மந்திரி தனது மக்களுக்கு எடுத்துச் சொல்லும்போது அதிகமான யுத்தம் இனிதான் போடவேண்டியிருக்குமென்று சொன்னான். ஜப்பான் யுத்தம் சம்பந்தப்பட்டவரையில் நாமும் அவ்விஷயத்தை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்'.

வி வி வி வி வி வி வி

**அடுத்தபடியாக.** பர்மாவை ஜப்பான் ஆக்கிரமித்துக்கொண்டதிலிருந்து அடுத்தபடியாக எங்கே பாயும் என்பதைப்பற்றி பல யோசனைகள் சொல்லப்படுகின்றன. சைனாவா, இந்தியாவா, ஆஸ்திரேலியாவா. பர்மா ரஸ்தா வழியாக சீனப் பிரதேசத்திலும் புகுந்திருக்கிறது. இந்தியாவில் சிட்டகாங்கையும் விமான மூலம் தாக்கியிருக்கிறது. பவளக் கடலுக்கு அருகில் கப்பல் சண்டையையும் போட்டிருக்கிறது. உண்மையில் பல இடங்களில் பைத்தியக்காரத்தனமாக சண்டை போட்டதால் ஜப்பான் அலுத்திருப்பதென்பது உண்மை. ஆகவே இன்னும் கொஞ்ச நாள் சும்மா இருக்குமென்றே எதிர்பார்க்கலாம். சமீபத்தில் ஏராளமாக சைனியங்களை சேமித்ததில் இருந்து தனது தற்காப்பு நிலைகளையும், பர்மா, மலேயா, டச்சுத் தீவுகள், பிலிப்பைன்ஸ் முதலிய இடங்களையும் காபந்துசெய்ய இருக்கலாம். ஒருக்கால் 5 வருஷ காலமாக நடந்துவரும் சைனா யுத்தத்தை முடிக்கவும் இருக்கலாம். அப்படியானால் சைனா பேரில் பலமாக எதிர்ப்புசெய்து சமாதானத்திற்கு வரும்படி பலாத்காரம் செய்யப்படலாம்.

சுங்கிங்கிலும் இந்த அபிப்பிராயம்தான் சொல்லப்படுகிறது. லாஷியோ விலிருந்து பர்மா ர்ஸ்தா மூலமாயும், தனக்கு சுவாதீனமாயுள்ள பிரெஞ்சு இந்தோ-சைனுவிலிருந்தும், கடல் மூலமாக கான்டனிலிருந்தும் சுங்கிங்கைத் தாக்கலாம். எல்லா பாகங்களிலும் ஏககாலத்தில் தாக்குதல் நேரும்.

இந்த கஷ்ட நிலையை சீனப்படைகள் தைரியமாகவே சமாளிக்க நினைக்கின்றன. சாமான்கள் தடையில்லாமல் போய்ச்சேருவதாலும், அமெரிக்க சாமான்களின் உற்பத்தி குறையாமல் நடப்பதாலும், சீனர்களின் நம்பிக்கை நிச்சயம் நிறைவேறும். மேலும் அதற்குள் பஸிபிக் நிலைமையும் நேசதேசங்களுக்கு சாதகமாகிவிடும்.

வி வி வி வி வி வி வி

**பதிலுக்குப் பதில் படையெடுப்புகள்.** லூபெக், ரோஸ்டக், கோலோன் முதலிய இடங்களில் பிரிடிஷ் விமானங்கள் குண்டுகளை வீசியதற்கு பதில் செய்யும் விதமாக பாத், எக்ஸிடர், நார்விச், யார்க் முதலிய பிரிடிஷ் பட்டணங்களை ஜெர்மானியர் தாக்கியிருக்கின்றனர்.

இந்த இரண்டு நாடுகளும் தாக்கிய பட்டணங்களை ஒப்பிட்டுப்பார்த்தால், பிரிடிஷ் விமானங்கள் தாக்கியது பூரா ராணுவ நிலயங்கள்தான். ஆனால் ஜெர்மானியர், ராணுவ முக்கியத்துவமே இல்லாத பொதுஜனங்கள் வசிக்கும் இடங்களைத் தாக்கி வீண் பயத்தை உண்டுபண்ணுகின்றனர்.

லூபெக்கும் ரோஸ்டக்கும் இரண்டு துறைமுகங்கள். இவைகள் மூலமாக டென்மார்க், நார்வே, ஸ்வீடன், பின்லாந்து, பால்டிக் முதலிய இடங்களுக்கு சாமான்களை அனுப்புவதற்கு சாதகமாக இருக்கிறது. ரோஸ்டக்கில் விமானங்களும், நீர்மூழ்கிகளும் கட்டப்படுகின்றன. கோலோன் என்பது ரைன்லாந்தில் ஒரு பெரிய தொழிற்சாலை நகரம். லூபெக்கில் வாசயோக்யமான இடங்கள் இருக்கின்றன. கோலோனில் பெரிய மாதா கோவில் இருக்கிறது. இருந்தாலும் பிரிடிஷ் தாக்குதல்கள் உற்பத்தி சாலைகளிலும், எதிரிப் போக்குவரத்துகளிலும் தான் ஏற்பட்டன.

ஆனால் பிரிடிஷ் நகரமான பாத் என்பது மிகப்பிரசித்தமானது. இங்கே ரிடையர் ஆன உத்தியோகஸ்தர்களேதான் வசிப்பது. ஒரு தொழிற்சாலை இருக்கிறது. அதுவும் ராணுவ முக்கியத்துவம் வாய்ந்ததல்ல. எக்ஸிடரும், நார்விச்சும் விவசாய நகரங்கள். கோவில்கள் இருக்கின்றன. யார்க் என்பது ஒரு கோட்டை. ஆனால் அது தொழிற்சாலை நகரமில்லை.

இவ்வித பிரிடிஷ் நகரங்களை ஈவிரக்கமில்லாமலும் காட்டுமிருண்டித்தனமாயும் தாக்கிய ஜெர்மானியரின் நோக்கங்கள் மிக அற்பமானவைகளாகவே தானிருக்க வேண்டும். ஜெர்மனியில் ஜனங்களிடையே ஓயாமல் மனஸ்தாபம் ஏற்பட்டு வருகிறது. அந்த மனக்குறையைத் தீர்ப்பதற்காக பிரிடிஷ்காரர்களும் அவஸ்தைப் படுகிறார்களென்று காண்பிக்கவே பிரிடிஷ் நகரங்கள் தாக்கப்படுகின்றன. ஆனால் பதிலுக்குபதில் தாக்குவதற்கு லாயக்காக விமானங்கள் ஜெர்மனியில் இல்லை. அதனால் தான் ஒரு முக்கியத்துவமும் பெறாத பிரிடிஷ் நகரங்களமீது சொற்ப ஜெர்மன் விமானங்கள் வந்து தாக்கின. மேலும் எல்லா பிரிடிஷ் தொழிற்சாலை நகரங்களும் நன்றாகக் காபந்து செய்யப்பட்டிருக்கின்றன என்றும் அங்கே சென்றால் ஆபத்து நேருமென்றும் எதிரிக்குத் தெரியும். கொஞ்சம் பாதுகாப்புள்ள நார்விச்சில், எதிரிகளின் 20 விமானங்களில் 4 நாசமாயின. ஆகவே பொது ஜனங்கள் வசிக்கும் இடமாகப் பார்த்து நாஸிகள் தாக்குகின்றனர்.

வி வி வி வி வி வி வி

**மூன்று முக்கிய ருஜுக்கள்.** பிரிடிஷ் விமானப்படை ஜெர்மனியில் விளைவித்த நஷ்டத்தைத் தெரிவிக்க பதினைந்து நாட்களாக மூன்று ருஜுக்கள் கிடைத்துள்ளன. லூபெக், ரோஸ்டக், கீல், ஹாம்பர்க் போன்ற தொழிற்சாலை நகரங்கள் தாக்கப்பட்டதால் அதற்குப் பிரதியாக பாத் போன்ற பிரிடிஷ் நகரங்கள் தாக்கப்பட்டதே முதல்தரமான ருஜு.

பிரிடிஷ் பாம்பர்களால் தாக்கப்பட்ட ஜெர்மன் நகரிலுள்ள பொதுவான ஞாபகச் சின்னங்களுக்கும், பொதுமக்களுக்கும் சேதமேற்பட்டது. இதைக்கண்டு நாஸிப் பிரசார மந்திரி கோயபெல்ஸ் கவலையுற்றிருக்கிறான். இதுவே இரண்டாவது அத்தாக்ஷியாகும். வெரும் பொதுமக்கள் வசிக்கும் இடங்களை பிரிடிஷ் விமானங்கள் தாக்கவே தாக்கா. ஆகவே ஜெர்மன் தொழிற்சாலைகள் அழிவதைப் பார்த்து கோயபெல்ஸ் உண்மையிலேயே கவலையுற்றிருக்கிறான்.

மூன்றாவது என்னவென்றால் சமீபத்தில் செய்யப்பட்ட ஹிட்லரின் பேச்சு தான். இதில் பிறர்மேல் தோஷாரோபணமும், குறையும், பயமுறுத்தல்களும் காணப்பட்டன. பிரிடனின் கோயில்களின் பேரிலும், ஞாபகசின்னங்கள் பேரிலும் குண்டுகளைப்போட்டு அழிக்கப்போவதாகச் சொன்னான். ஆனால் இவன் செய்யும் பயமுறுத்தல்களுக்கு ஒரு பலனும் கிடைக்காது. 1940-ல் இன்னும் பலமாகவே பயமுறுத்தினான். பிரிடிஷ் மக்களை அடியோடு அழித்துவிடுவதாகவே சொன்னான். பிரயத்னமும் எடுத்துக்கொண்டான். ஆனால் சம்பம் சாயவில்லை. தற்சமயத்திலோவெனில் பிரிடனே எதிர்த்து அடிக்கும் வல்லமை பெற்றிருக்கிறது. வருஷம் பூரா ஜெர்மனியைத் தாக்கப் போவதாக மிஸ்ட்டர் சர்ச்சில் சொல்லுகிறார். ராட்டர்டாம், வார்ஸா, பெல்கிரேட், முதலிய நாட்டு அரசாங்கங்களெல்லாம் தங்களையே குறைகூறவேண்டியதுதான். அவைகள் திரும்ப பலம் பெரும் நாள் வந்துவிடும். எரும் பூரக் கல்லும் தேயும். தெய்வம் நின்று கொல்லும், என்னும் விதமாக ஜெர்மனி அடியோடு அழியும் காலத்தை நேசநாடுகள் உண்டாக்கி வருகின்றன.

வி வி வி வி வி வி வி

**பிரிடிஷ் விமானப்படையும் வெற்றியும்.** நாஸிகள் செய்யும் பயமுறுத்தல்களுக்கு மாறாக பிரிடிஷ் விமானப்படை காரியாம்சத்தில் ஈடுபட்டு ஜெர்மனியில் சேதத்தை விளைவித்து வருகிறது. பிரிடிஷ் தாக்குதல்கள் பயன்படாது என்று செய்த ஜெர்மன் பிரசாரம் தான் பயன்படாமல் போயிற்று. கடுமையான சீதோஷ்ண நிலைகளிலும் பிரிடிஷ் விமானப்படை மீண்டும் மீண்டும் தாக்கிவருகிறது. லண்டனில் விழுந்த ஜெர்மன் குண்டுகளைவிட அதிகமாகவே ரேனால்டு தொழிற்சாலையில் போடப்பட்டன. ஆனால் சிறிய அளவில் ஜெர்மன் பிரதேசங்களில் தாக்குவது போதாது என்றாலும் ஜெர்மன் தொழிற்சாலைகளை அழித்துவிட்டால் அதன் மூலமாக எதிரிக்குக் கெடுதி ஏற்படும் மேலும் ருஷ்யா, லிபியா, மால்டா முதலிய போர்முனைகளிலிருந்து விமானப்படையைப் பிரித்து மேற்கே அனுப்பும் நிர்ப்பந்தமும் ஏற்படும் அதன் மூலமாக ஜெர்மன் லுப்ட்வாபி விமானப்படைக்கு சேதமேற்படும். பிறகு தாராளமாக ஒன்றன் பின் ஒன்றாக ஜெர்மன் தேசங்களைத் தாக்கி வசப்படுத்த முடியும். இவ்விதம் தான் போலந்திலும் ஹாலந்திலும் ஜெர்மானியர் செய்தனர்.

வி வி வி வி வி வி வி

**உள்நாட்டில் கலகத்தை அடக்க ஜெர்மன் முயற்சிகள்.** சிலவாரங்களாக ஜெர்மனியில் சில சட்டங்கள் அமூல் படுத்தப்படுகின்றன. இவைகளால் ஜெர்மனியிலுள்ள இதர கக்ஷிகளையும் அரசாங்கத்தினரையும் அடக்கி ஆள நாஸிகளுக்கு விசேஷ அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மே 21உ ரீஷ்டாக் சபையின் கூட்டத்தில் ஹிட்லர் விசேஷ அதிகாரங்களைக் கோரியதும் இதற்காகத்தான். மார்ச்சு 21உ நியாய சபைகளின் வேலைகளை லெகுவாக்குவதற்கென்று ஒரு சட்டம் அமூலுக்கு வந்தது. ஆனால் நீதிபதிகளை தான் விரும்பியபோது வேலையிலிருந்து நீக்க ஹிட்லருக்குத்தான் அதிகாரம் கிடைத்தது.

பொதுஜன அரசாக்ஷி முறையிலும் சில கடுமையான திட்டங்கள் பாஸ் செய்யப்பட்டன. மார்ச்சு 26உ ஒரு சட்டம் பாஸ் செய்யப்பட்டு அதன்படி உத்தியோகஸ்தர்களின் பிரமோஷனோ, நியமனமோ, மாற்றலோ யாவும் நாஸி கவர்னர்களிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. ஜெர்மனியில் உத்தியோகஸ்தர்கள்

யாவரும் நாஸிக் கக்ஷியைச் சேர்ந்தவர்களாவே இருக்கவேண்டும். இவ்விதமாக தோட்டி முதல் தொண்டமான் வரை ஜெர்மனியில் நாஸிக் கக்ஷியைப் பின்பற்ற வேண்டும்.

மேலும் நாஸிக் கக்ஷித் தலைவர்களுக்கும் விசேஷ அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது. பார்மானுக்கு ஸர்வ அதிகாரம் கொடுத்து ஜனவரி 16-ல் ஒரு சட்டம் பாஸ் செய்யப்பட்டிருக்கிறது. பார்மானுக்கு அடுத்தபடியாக ஹிம்லரும் ரகசியப் போலீஸும் இருக்கின்றன. குற்றத் தொழிலைச் செய்யும் உத்தியோகஸ்தர் களைத் தண்டிக்க ஹிம்லருக்கு விசேஷ அதிகாரம் கொடுக்க ஏப்ரல் 9-ல் ஒரு சட்டம் பாஸ் செய்யப்பட்டது.

இவைகளையெல்லாம் பார்க்கும்போது முன்பைவிடப் பெரிய குழப்பம் ஏற்படுமென்றே யாவரும் நினைக்கின்றனர். இப்படியெல்லாம் கட்டுப்பாட்டு களுக்கு உட்படாமல் போனால் ஜெர்மன் மக்கள் தோற்று நேசநாடுகளின் வசம் ஆகவேண்டிவருமென்று ஜெர்மன் மக்களுக்கு எடுத்துச் சொல்லப்படுகிறது. ஆனால் சமீபத்தில் ஜெர்மனியில் கலகம் நேராமலிருக்கலாம். ஏனென்றால் வசந்த காலத் தாக்குதலை யாவரும் ஆவலாக எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றனர். ஜெர்மன் ராணுவமும் பூரா அழியவில்லையென்றும் ஏதோ கொஞ்சம் கெடுதல் அடைந்திருக்கிறதென்றும் ஜெர்மனிக்கு வெற்றி கிடைக்குமென்றும் எடுத்துச் சொல்லி கொடிய சட்டதிட்டங்களை அமுல்படுத்துகின்றனர். ஆனால் வெற்றி ஜெர்மானியருக்கு கிட்டுவது மிகவும் சிரமம். ஆகவே ஜெர்மன் மக்களிடம் ஒற்றுமை குலைந்து ஜெர்மனியே அடியோடு அழியும்.

வி வி வி வி வி வி வி

**நாணய ஏமாற்றம்.** பிரான்ஸில் கிராமங்களின் முக்கியத்துவம்.—மார் ஸெயல்ஸில் வெளிவரும் ஸெமபோர் (Semaphore) என்ற பத்திரிகையில் தொடர்ச்சியாகவரும் வியாசங்களைப் பார்த்தால் பிரான்ஸுக்கு உலோக நாணயமே கிடையாதாம். அதற்குப் பதிலாகப் போலிச் சாமான்களைக்கொண்டு, அதாவது, இரும்பு, எஃகு, இன்னும் வியவசாயப் பொருள் களைக்கொண்டு தயாரிக்கப்படுமாம். இப்புதிய நாணயம்தான் எல்லாத் தொழிற் சாலைகளிலும், வியாபாரசாலைகளிலும், வியவசாய இடங்களிலும் உபயோகிக்கப் படும். 50, 10, 5, 1 டன் நிறையைக் குறிக்கும் காகித நோட்டுகளும் கொடுக்கப் படும். இவைகளைத்தான் குடியானவர்கள் சேர்த்து வைத்துக்கொண்டு தேவை யானபோது மாற்றிக்கொள்ளலாம். இதுவரையில் வியவசாயப் பொருள்களைக் கொண்டு பாங்கிகளில் மதிப்புப்பெற்று யாவரும் சொத்து வைத்துக்கொண்டிருந் தனர். இனிமேல் போலி டன் நோட்டுகளைக் கொடுத்து பண்டங்களைப்பெறலாம். இந்த ஏற்பாடு பார்ப்பதற்கு தான் நேர்த்திபோல் காணப்படும். ஏனென்றால் வியவசாயிகள் தங்கள் நிலங்களில் அதிகம் பரிசிரமப்பட சந்தர்ப்பம் ஏற்படு வதாக இருக்கிறது. ஆனால் லேவாதேவி ஒன்றும் செய்யமுடியாது. அதெல்லாம் தொழிற்சாலைக்காரர்கள்தான் செய்யலாம்.

இவ்விதமாகச் செய்து பிரெஞ்சுக்காரர்கள் குடியானவர்களாக இருந்து ஜெர்மானிய நில ஸ்வான்தார்களிடம் அடங்கி இருக்கும்படி செய்யப்படுகின்றனர். பிரெஞ்சுககாரர்களை நிலத்தை சாகுபடி செய்யவிட்டு ஜெர்மானியர் அதன் பலன்களை அடைவார்கள். ஜெர்மானியருக்கு உட்பட்டுத்தானிருக்கவேண்டிவரும். ஸ்வதந்திரமாக உலோக நாணயங்களைக் கொடுத்து சாமான்களை வாங்க முடியாத தலால் ஜெர்மனியைத் தவிர இதர பாகங்களில் வியாபாரம் செய்யும் உரிமை கிடைக்காது. இப்பழக்கம் நீடித்திருந்தால் பிரான்ஸுக்குத்தான் கெடுதி. சிறிது நாட்களில் நிலங்களெல்லாம் ஜெர்மானியருக்குச் சொந்தமாகிவிடும். வயது வந்த காலத்தில் பிரெஞ்சுக்காரர்களுக்குச் சொத்துவைத்துக்கொள்ளடியாது. அடிமைத் தொழில்தான் மிஞ்சும். ஜெர்மன் மாகாணமாகவே ஆகிவிடும்.

வி வி வி வி வி வி வி

**மெடகாஸ்கர்.** சமீபத்தில் நிகழ்ந்து வரும் யுத்தச் செய்தி களைத் தொடர்ந்து கவனிப்போருக்கு மெடகாஸ்கரை பிரிடிஷ்காரர்கள் வியாபித்துக்கொண்டது ஒரு ஆச்சரியமாக

இராது. இலங்கை, இந்தியா, ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, மத்தியக்கிழக்கு முதலிய இடங்களுக்கு இடையிலுள்ள போக்குவரத்திற்குச் சாதகமாக இருக்கும் மெடகாஸ்கரின் முக்கியத்துவத்தைப் பற்றி அதிகம் சொல்லத் தேவையில்லை. மேலும் கேப் டவுன், டர்பான், ஸைமன்ஸ் டவுன் போன்ற முக்கிய தென் ஆபிரிக்கத் துறைமுகங்களுக்கு வெகு அருகிலும் இருக்கிறது. இதை எதிரி பிடித்திருந்தால் ஆபத்தாகவே முடிந்திருக்கும். இந்து மகா சமுத்திரத்திற்குள் எதிரி பிரவேசித்து, கொழும்புவைத் தாக்கியதே அதிக ஆபத்தைக் குறித்தன. லவால் அதிகாரத்திற்கு வந்தது இன்னும் இந்த ஆபத்தை அதிகப்படுத்தியது. ஆனால் "நேசநாடுகள் உலகில் எந்தப் பாகத்திலிருந்தாலும் பிரெஞ்சு நாடுகளை அச்சுநாடுகள் ஆக்கிரமித்துக் கொள்ளுவதை நேசநாடுகள் தடுக்குமென்று" ஜனாதிபதி ரூஸ்வெல்ட் ஏப்ரல் 28உ அறிவித்ததிலிருந்து எதிரியைத் தடுக்க தீவ்ர முயற்சியுடன் நடந்து கொள்ளப்படுமென்று தெரிகிறது.

வி வி வி வி வி வி வி

**விஷ வாயு.** வேறு விதமாக ஜயம் பெற முடியாததால் விஷ வாயுவைப் பிரயோகித்து எதிரிகளை பயமுறுத்து வதை நாஸிகள் வைத்துக்கொண்டனர். சண்டைகளில் விஷ வாயுப் பிரயோகம் கூடாதென்று 1899-ல் ஹேக்கிலும், 1907-ல் வெர்ஸெயில்ஸ் சமாதானத்திலும், 1922-ல் வாஷிங்டனில் செய்து கொண்ட ஐந்து அரசு ஒப்பந்தத்திலும், 1925 பொதுவான ஒப்பந்தத்திலும் யாவராலும் ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது. ஆனால் நாஸிகளுக்கு சட்ட திட்டங்களேது. உலகிலேயே தன்னிஷ்டப்படி நடக்கும் காட்டுமிருண்டிகளாதலால் நாஸிகளுக்குச் சட்டமே கிடையாது. பதிலுக்குப் பதில் செய்தால் தான் அவர்களுக்குத் தெரியும். இதைப்பற்றி சர்ச்சில் வியக்தமாகச் சொல்லிவிட்டார்:—

"நமது பேரில் உபயோகித்த மாதிரி நமது நேசநாட்டினரான ருஷ்யர்களின் மீது முதலாவதாக நாஸிகள் விஷ வாயுப் பிரயோகம் செய்திருப்பதைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அதற்குப் பிரதியாக நாம் தயார் செய்திருக்கும் விமான பலத்தைக் கொண்டு விஷ வாயுவை நாமும் பிரயோகிப்போம். ஜெர்மனியிலுள்ள தொழிற்சாலை லக்ஷியங்களிலேயே இம்மாதிரி செய்யப்படும்.

"இவ்வித தொந்தரவை விலைக்கு வாங்கிக்கொள்ளவேண்டுமா என்பதைப் பற்றி ஹிட்லர் தீர்மானித்துக்கொள்ளவேண்டியது.

---

## சந்தோஷமாகவே சகித்துக்கொள்ளுகின்றனர்.

## பிரிடிஷ் வரவு செலவு திட்டத்தைப் பொதுமக்கள் அங்கீகரிக்கின்றனர்.

(ரென்னி ஸ்மித் எழுதியது).

பிரிடிஷ் பார்லிமெண்டு நடவடிக்கைகளில் வரவு செலவு திட்டம் தீர்மானிக்கப்படும் தினம் ஒரு முக்கிய தினம். 1942–43-ல் செலவு 5,28,60,00,000 பவுன் என்று உத்தேசமாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. சென்ற வருஷத்தைவிட இது 70,00,00,000 பவுன் அதிகமானது. இதன்படி இவ்வருஷத்தில் சென்ற வருஷத்தைவிட தினச்செலவு 20,00,000 அதிகமாகும். மொத்தச் செலவில் வரி செலுத்துகிறவர்கள் 4,50,00,00,000 பவுனைப் பொறுத்துக்கொள்ளவேண்டும். விகிதத்தால் 2,40,00,00,000 பவுன் கிடைக்கும். மீதம் 2,10,00,00,000 பவுனை பொதுமக்கள் தாங்களாக மீதம்பிடித்துத் தரவேண்டும்.

இவ்விதமாக தேசத்தின் செலவை பொதுமக்கள் முகமலர்ச்சியுடனே பொறுத்துக்கொள்ளுகின்றனர். இந்த வரவு செலவு திட்டத்தைத் தயாரித்ததற்காக எல்லாக் கக்ஷியினரும் பொக்கிஷ மந்திரியை வாழ்த்தினார்கள். லேபர்

கக்ஷித்தலைவர் மிஸ்டர் ஆர்தர் கிரீன்வுட் அந்த சந்தர்ப்பத்தில் பேசும்போது பின்வருமாறு சொன்னார்:—"கள்ளத்தனமான வியாபாரத்தைத் தடுக்கவும், அனுவசியமாக சாமான்களை நாசப்படுத்தாமலும், முடிந்தவரை தொழிற்சாலை சாமான்களைச் சேகரித்துவந்தால் ஜனங்களுக்கு ஒருவித சிரமம் ஏற்படாது" என்றார்.

இதைப்பற்றி பொதுமக்கள் அபிப்பிராயத்தைச் சொல்லும்போது "சந்தோஷமாகவே சிரமத்தைப் பொறுத்துக்கொள்ளவேண்டும்" என்கிறார்கள்.

---

# அதிராஜத்வமில்லாத சாம்ராஜ்யம்.

## இங்கிலாந்தைப்பற்றி அமெரிக்க அபிப்பிராயம்.

இங்கிலாந்தில் நடக்கும் விஷயங்களை நிலக்கண்ணாடி போல் விளங்கச் செய்யும் **டைம்** பத்திரிகை இங்கிலாந்தின் குணம், உணர்ச்சி, நோக்கங்கள் முதலியவைகளைப்பற்றி ஒருதடவை அமெரிக்கர்களுக்கு எடுத்துக் காட்டிற்று. "ஒருவனுடைய இயற்கை குணமே அவனுடைய நன்மை தீமைகளுக்குக் காரணம் என்றால் தற்போதுள்ள இங்கிலாந்தில் இயற்கை குணம் யாது?" என்ற கேள்விக்கு அப்பத்திரிகையில் கொடுக்கப்பட்டிருந்த சில விடைகளை டெயிலி எக்ஸ்பிரஸ் பத்திரிகை அச்சிட்டிருந்தது. அவைகளை நாம் கொடுப்போம்.

"இங்கிலாந்திலுள்ளோரின் அபிப்பிராயங்களெல்லாம் இரண்டு வார்த்தைகளைப்பற்றியேதான் இருக்கின்றன. ஒன்று சாம்ராஜ்யத்தை வைத்துக்கொள்ளுவது, மற்றொன்று யாவருக்கும் சமஉரிமை கொடுப்பது. இந்த இரண்டில் பிரிடிஷ் மக்கள் சாம்ராஜ்யத்தை வைத்துக்கொள்ள ஆசைப்படவில்லை. ஆகவே சம உரிமையை விரும்பலாம். இருந்தாலும் சாம்ராஜ்யம் இல்லாமலிருந்தால் எப்படி இருக்குமென்பதை அவர்கள் இன்னும் தீர விசாரிக்க வில்லை. மேலும் பணக்கார வர்க்கம் தானாகவே குறைந்துவருகிறது.

"இங்கிலீஷ்காரர்கள் யாவரும் சாம்ராஜ்யத்தை ஆஸ்தையுடன் வைத்துக் கொள்ள விரும்பவில்லை. தானாக ஏற்பட்டால் ஒருவிதமான முயற்சியில்லாமலேயே சாம்ராஜ்யம் தானாகவே இருக்குமென்று நம்பியிருக்கிறார்கள். அதற்காக பிரத்தியேக முயற்சி எடுத்துக்கொண்டு சாம்ராஜ்யத்தை மீண்டும் ஏற்படுத்திக் கொள்ள சண்டைசெய்யப்போவதுமில்லை. சாம்ராஜ்யத்தைப்பற்றிய தீவ்ர சிந்தனையும் கிடையாது".

### தயாள குணத்தின் பலன்.

"ஆகவே கிரேட் பிரிடன் சண்டைக்கு ஆரம்பித்தபோது குடியேற்ற நாடுகளும் கூடச்சேருமென்று எதிர்பார்க்கவில்லை. குடியேற்ற நாடுகள் தாங்களாகவே முன்வந்து உதவி, யுத்தத்திலீடுபட்டதற்குக் காரணம் என்னவென்றால் பிரிடிஷ் ஆட்சியில் அதிராஜத்வமான தன்மை யில்லை என்பதுதான். பிரிடன் தயாளமாக நடந்து கொண்டதற்கு குடியேற்ற நாடுகள் நடந்து கொண்டது ஒன்றே போதுமான அத்தாக்ஷியாகும்.

"ஜெர்மானியர், ருஷ்யர், ஜப்பானியர் இவர்களைக் காட்டிலும் இங்கிலீஷ்காரர்களுக்கு உண்மையாக காரியத்தில் நடத்திக்காண்பிக்கும் தன்மையும் முரட்டு சுபாவமும், வெற்றியடைவதற்கான யோக்கியதையும் இருந்துவருகின்றன. முரட்டு சுபாவம் எதற்காக என்று நமக்குத் தெரியாது. இங்கிலீஷ் வாலிபர்களுடன் கலந்து பழகினால்தான் அதற்குத் தகுந்த விடை கிடைக்கும். தன்னைக் காட்டிலும் மேலான புருஷார்த்தம் ஒன்றிருக்கிறதென்பதைத் தெரிந்து நிச்சயித்துக்கொண்டு பிரிடிஷ் மக்கள் நடந்துகொள்ளுகின்றனர்."

# வெடிகுண்டுகள் போட்டு முற்றுகை போடுவது.

## பிரிடிஷ் விமானப் படையெடுப்பினுல் அதிக பயன்கள் கிடைக்கின்றன.

(விமான உபதலைவர் L. V. பிரேசர் எழுதியது).

பால்டிக் கடலிலுள்ள லூபெக் துறைமுகத்தில் ருஷ்யப் போர்முனைக்கு அனுப்புவதற்காக தொழிற்சாலைகளிலும் துறைமுகத்திலிருக்கும் கப்பல்களிலும் சாமான்கள் ஏற்றி தயாரிலிருந்தன. பனி உருகும் காலம் துவங்கியவுடன் கப்பல்கள் பிரயாணத்திற்குத் தயாராக இருந்தன. கப்பல் பிரயாணத்திற்கு வழி நேராகிவிட்டது. ஆனுல் இன்னும் அங்கிருந்த சாமான்களில் பெரும்பாகம் சமுத்திரத்தைத் தாண்டிக்கொண்டு போகமுடியவில்லை. ஏனென்ருல் பிரிடிஷ் விமானப்படை குறிக்கிட்டு அவைகளைப் போகவிடாமல் தடுத்துவிட்டது.

யுத்த ஆரம்பத்தில் ஜெர்மானியர்கள் எதிர்பார்த்ததற்குமேல் பிரிடிஷ் விமானப்படையின் தாக்குதல்கள் ஆரம்பித்துவிட்டன. இந்த வருஷத்திற்கு வசந்த காலத்தில்தான் தாக்குதல் ஆரம்பமாகிறது. ஜெர்மன் நகரங்கள்மீது தாக்குதல்களினுல் தீக்கள் பரவியதாகவும், திடீரென்று வெடிகள் ஏற்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. இராக்காலங்களில் லூபெக் மீது தாக்குதல்களில் புகைப்படங்கள் எடுத்ததில் தெரிந்தது மாதிரி மற்ற இடங்களிலும் விசாலமான இடங்களில் தீ பரவியிருந்ததாகப் புகைப்படங்களிலிருந்து தெரிகிறது. தாக்குதல் முடிந்தவுடன் கீழே தீயின் பிரகாசத்தால் புகைப்படங்கள் மங்கலாக எடுக்கப்பட்டிருக்கின்றன. லூபெக்கில் ஏற்பட்ட சேதம்போல் வேறு எந்த ஜெர்மன் நகரத்திலும் ஏற்படவில்லை. ஏக்கர் ஏக்கராக கூரைகள் போன வீடுகள் காணப்பட்டன. அநேக தொழிற்சாலைகள் தீக்கிறையாகின. கப்பல் தங்குமிடங்கள், பண்டகசாலைகள் இவைகள் யாவும் இடிந்து, அழிந்துபோயின.

இதனுல் ஜெர்மன் பொதுமக்களின் உணர்ச்சி மிகவும் பாதிக்கப்டிருக்கிறது. இம்மாதிரி தாக்குதலின் நோக்கம் பிற்பாடுதான் வெளியிடப்படும். சமுத்திரத்தைக்கடந்து அனுப்பமுடியாமல் அங்கு சாமான்கள் நிறைந்த ஸ்டோர்கள் அநேகம் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. திடீரென்று லூபெக்கில் தாக்கினதினுல் பின்னிஷ் போர்முனையில் ஜெர்மானியர்களுக்கு சாமான்கள் வரமுடியாமல் போய்விட்டது.

## ஐந்து படைப்பகுதிகளின் யுத்தசாதனங்கள் அழிக்கப்பட்டன.

பிரான்ஸில் ரெனுல்ட் தொழிற்சாலைகளிலும், மாட்போர்டு தொழிற்சாலைகளிலும், தாக்குதல்கள் ஏற்பட்டதில் இம்மாதிரி பயன்கள் விளைந்திருக்கிறது. அந்தப் பெரிய யுத்த சாதனங்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளுக்கு ஏற்பட்ட சேதத்தை புகைப்படங்கள் ரூபிக்கின்றன. ஐந்து ஜெர்மன் படைப் பகுதிகளின் பூரா முஸ்தீப்பு சாதனங்கள் முற்றிலும் அழிக்கப்பட்டன. ஆனுல் இந்த சேதத்தினுல் எங்கேயிருந்த ஐந்து படைப்பகுதிகளுக்குக்கஷ்டம் நேரிட்டதென்று தெரியவில்லை. ருஷ்யாவில் இருப்பவைகளுக்கும் அந்தக் கஷ்டம் ஏற்படலாம். அல்லது லிபியாவில் இருப்பவர்களுக்கும் அம்மாதிரி ஏற்படலாம். அல்லது ஐரோப்பா கண்டத்தில் தற்காப்புக்காக வைத்திருக்கும் படைகளுக்கும் ஏற்படலாம். ரூர் பிரதேசத்திலிருந்து எஃகு ஐரோப்பாவிலுள்ள தொழிற்சாலைகளுக்குப் போகாமல் செய்ததினுல் எங்கே இருக்கும் போர் படைகளுக்குப் முதலில் பாதிப்பு ஏற்படுமென்று இப்பொழுது சொல்லமுடியாது. ரூர் பிரதேசத்தில் மேற்குக் கோடியிலிருக்கும் தைஸன் (Thyssen) எஃகு தொழிற்சாலைகளின்மேல் பிரிடிஷ் விமானப்படை வெடிகுண்டுகள் போட்டதினுல் கிழக்கு ஜெர்மனியிலிருக்கும் சில தொழிற்சாலைகள் வேலையில்லாமல் இருக்கலாம்.

பிரிடிஷ் விமானப்படையின் வெடிகுண்டு தாக்குதல்களினுல் இன்னும் அதிகப் பயன்களும் உண்டு. பிரிடிஷ் கப்பற்படையும், ஆகாய விமானப் படையும் ஒன்றுக்கொன்று அடைந்திருக்கும் ஆயுதங்களின் பலாபலத்தைத் தெரிந்து

கொண்டு அதற்குத் தக்கவாறு ஒத்துழைக்கின்றன. ஜெர்மனியின் நீர்மூழ்கிக் கப்பல்களுக்கு தேவையான டீஸெல் (Diesel) யந்திரங்கள் செய்யும் ஹாம்பர்க் தொழிற்சாலையிலோ, ஆக்ஸ்பர்க்கிலுள்ள ஏதாவது ஒரு தொழிற்சாலையிலோ, அல்லது ஜெர்மனியின் பெரிய கப்பல் தளங்களில் ஒன்றிலோ வெடிகுண்டுகள் போட்டால் ஜெர்மனியின் பலம் வெகு ஜாஸ்தியாகக் குறைந்துவிடும். இது தான் வெடிகுண்டு தாக்குதலால் போடக்கூடிய முற்றுகை. யுத்த முயற்சியால் போடப்படும் முற்றுகையைக் காட்டிலும் வேறு எந்த ஆயுதமும் அதிகப்பயன் தரக்கூடியதாக இருக்கமாட்டாது. முந்தி நடந்த யுத்தங்களிலேயே இந்த ஆயுதத்தை எந்த சந்தர்ப்பத்தில எப்படி உபயோகிக்கலாம் என்று பிரிடன் தெரிந்துகொண்டிருக்கிறது. புதிய ஆயுதங்களுடன் நூதன முறைகளில் பிரிடன் அம்முற்றுகையை இப்பொழுது உபயோகித்துவருகிறது. சமீபத்தில் பாம்பர் விமானப்படைத்தலைவர் பிரிடனின் வெடிகுண்டு உற்பத்தி செய்யும் தொழிற் சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளிகளுக்கு அனுப்பிய செய்தியில், "நீங்கள் வெடிகுண்டுகள் ஏராளமாக உற்பத்தி செய்யுங்கள். நாங்கள் ஜெர்மன் பிரதே சங்களில் இடைவிடாமல் வீசி சேதத்தை விளைவித்து வருகிறோம்." என்று தெரிவித்திருக்கிறார்.

### பகல்காலத் தாக்குதல்கள் அதிகரிக்கின்றன.

ஜெர்மனி சண்டை செய்யும் எல்லாப் போர்முனைகளிலும் பிரிடிஷ் விமானப் படை சென்று வெடிகுண்டுகள் போட்டு சேதத்தை உண்டாக்குவதோடு நிறுத்திக் கொள்ளவில்லை. பைடர் விமானப்படைப்பகுதியும் பாம்பர் விமானப்படைப் பகுதியும் ஒன்று சேர்ந்து மேற்குப் போர்முனையில் பகற்காலத்தில் முன்னேறித் தாக்கி ஜெர்மனிக்கு உதவியளிக்கும் ஜெர்மன் தொழிற்சாலைகளைத் தகர்த்து வரு கின்றன. வசந்த காலத்தில், ஆயிரக்கணக்கான பிரிடிஷ் பைடர் விமானங்கள் இங்கிலீஷ் கால்வாயைக் கடந்து தினம் சண்டைக்குச் செல்லுகின்றன. அவை களுடன் வெகு வேகமாய் பறக்கும் போஸ்டன் பாம்பர்களும் செல்லுகின்றன. இந்த பாம்பர்களை ஜெர்மானியர் அலக்ஷியம் செய்ய முடியாது. அவர்களின் மெஷர்ஷிமிட்ஸ் விமானங்களுக்கு நமது பைடர் விமானங்களுடன் சண்டை செய்யவேண்டிய நிர்ப்பந்தமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. பகற்காலத்தில் பூராவும் வெடிகுண்டு போடுவதினால் மேற்குப் போர்முனையில் ஜெர்மனிக்குள்ள சாதனங்கள் எல்லாம் குறைந்துகொண்டே போகின்றன. இப்பொழுது சதா காலமும் நேரிடும் விமானப்போரில் ஜெர்மன் பைடர் விமானப்படையின் பலம் குன்றிவருகிறது. அதனால் அவ்விமானங்கள் வேறு போர் விமானங்களுக்குச் சென்று போரில் ஈடுபட முடியாமல் போய்விடுகிறது. இத்துடன் பாம்பர் விமானப்படைப் பகுதியின் இராக்கால தாக்குதலைத் தடுக்க தற்காப்புக்காக 15 லக்ஷம் ஜெர்மானியர்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படையில் இராக் காலத்தில் சண்டை செய்யக்கூடிய அதிக பயிற்சி பெற்ற பைடர் விமானப்படை பலமும் சேர்ந்து இருக்கிறது. பிரிடிஷ் விமானப்படையைச் சேர்ந்த பாம்பர் களும், பைடர்களும் ஒவ்வொரு பகுதியாக ஐரோப்பா கண்டத்தில் போய் தாக்கி வருவதைத் தடுப்பதற்கு ஜெர்மன் தற்காப்புச் சைனியம் இன்னும் அதிகமாகப் பலப்படுத்திக்கொள்ளவேண்டிவரும். மேலும் ஆங்காங்கு பிரிடிஷ் விமானப் படை அடிக்கடி வருவதினால், ஜெர்மன் அரசாங்கத்தை எதிர்த்து நிற்கும் ஸ்வதந்திர மக்களுக்கு தைரியம் அதிகரித்து வருகிறது.

---

## அமெரிக்கப் பத்திரிகைகளின் அபிப்பிராயங்கள்.

---

**கிரிஸ்தியன் ஸயன்ஸ் மானிடர் பத்திரிகையில் ரோஸ்கோ டிரம்மண்டு எழுதியது ஏப்ரல் 17உ.**—திட்டப்படியே செய்யப்பட்டுவருகிறது. விமானங்கள், டாங்கிகள், தளவாடங்கள் முதலியவைகளின் உற்பத்திக்கணக்கை டிஸம்பர் மாதத்தில்

ரூஸ்வெல்டு திட்டம் செய்தபடி தற்சமயம் நிறைவேற்றப்படுகிறது. யுத்த சாமான்களின் உற்பத்தி சம்பந்தப்பட்டவரையில் எல்லாம் சாதகமாகவே இருந்து வருகிறது. இன்னும் சில மாதங்களுக்குள் 60,000 விமானங்களும், 45,000 டாங்கிகளும், கட்டி முடிவடைந்துவிடும். 20,000 விமான எதிர்ப்பு பீரங்கிகளும், 8,00,000 டன் நிறையுள்ள கப்பல்களும் கட்டி முடிவடைந்துவிடும். ஆனால் இத்துடன் இல்லாமல் மேலும் மேலும் ஏராளமாகக் கட்டப்படும்.

**நியூ யார்க் டைம்ஸ் ஏப்ரல் 10உ.**—அமெரிக்க லேபர் சங்கத்திலிருந்தும், நியூ யார்க்கிலுள்ள தொழிற்சாலைக் கூட்டத்திலிருந்தும் பிரதிநிதிகள் வந்து ஜெர்மன்—அமெரிக்க வர்த்தகச் சங்கத்தின் வெற்றிக்கமிட்டியில் சில அறிவிப்புகளைச் செய்தனர். அதாவது "அமெரிக்கா முன்னேறிப் போர் நடத்தி ஹிட்லரை நசுக்கவேண்டுமென்று ஜெர்மன்—அமெரிக்கர்கள் அபிப்பிராயத்தைக் குறிக்க ஒரு பாம்பர் விமானம் கவர்ன்மெண்டிற்குப் பரிசாகக் கொடுக்கப்படும். அமெரிக்காவிலுள்ள ஜெர்மானியர்களான நாங்கள் ஜனநாயகத்தின் வெற்றிக்காக உதவி செய்யவேண்டும்."

**பிராவிடன்ஸ் ஈவினிங்த புலடின்** (Providence Evening Bulletin) **ஏப்ரல் 18உ.**—1940-ம் ஹூ கோடைகாலத்தில் நடந்த சண்டையில் பிரான்ஸின் அந்தரங்கருணமும், கௌரவமும், தேசீய உணர்ச்சியும், சோபையும் அழியவில்லை. தோல்வியடைந்தாலும் பூரா அழிந்துவிடவில்லை. ஏதோ சிலர் துரோகிகளானார்களே தவிர மற்றவர்கள் எதிரி வசப்படவில்லை. ஹிட்லர் முடிந்தவரை பாடுபட்டுப் பார்த்தான். அவனாலேயே முடியவில்லை. தற்சமயம் பியரி லவாலாலும் முடியாது.

---

## வெகுதூரம்வரை செல்லக்கூடிய பாம்பர் விமானங்கள்.
## மூன்று விசேஷ சம்பவங்கள்.
## எவ்விதம் பிரிடன் ருஷ்யாவிற்கு உதவியளிக்கிறது.
## ஹிட்லரின் பின்னணித் தலைவர், லவால்.

(உபதலைவர் **ஸர். டக்ளஸ் ப்ரௌன்ரிக்** எழுதியது.)

சென்ற ஏப்ரல் மாதம் 23-ம் தேதியுடன் முடிந்தவாரத்தில் வெகு தொலைவரை சென்று தாக்க சக்திவாய்ந்த அமெரிக்க, பிரிடிஷ் பாம்பர் விமானங்கள் தூரக்கிழக்கிலும், ஐரோப்பாவிலும் சென்று தாக்கி பல சேதங்களை விளைவித்தன.

மிகவும் கனமான பாம்பர் விமானங்களைக்கொண்டு பிலிப்பைன்ஸிலுள்ள ஜப்பானியர்களை தளகர்த்தர் ரால்ப் ராய்ஸ் (Ralph Royce) தாக்கி வெற்றியடைந்தார். அப்போரில் பாம்பர் விமானங்கள் மகத்தான சேவை புரிந்தன. உதாரணமாக அவைகள் எதிரிகளை லக்ஷியம் செய்யாமல் அங்கிருந்த 30 பிரயாணிகளையும் ஏற்றிக்கொண்டு பத்திரமாக அவைகளின் தளத்திற்கு வந்துசேர்ந்தன. அவ்விமான தளம் எங்கிருக்கிறதென்ற விஷயம் ஒருவருக்கும் தெரியாது. அது படையெடுப்பு நடந்த இடத்திலிருந்து வெகு தொலையில் இருக்கிறதென்று மட்டில் நாம் ஊகிக்கலாம்.

சில நாட்கள் சென்றன. ஆக்ஸ்பர்க்கிலுள்ள ஜெர்மன் தொழிற்சாலையை வெகுதொலைவரை செல்லக்கூடிய பிரிடிஷ் பாம்பர்படை லக்ஷியத்திற்கு வெகு அருகாமையில் பறந்துசென்று வெடிகுண்டுகளை வீசினவென்று செய்திகள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. இந்த ஆபத்தான காரியத்தை செய்துமுடிக்க 12 பாம்பர் விமானங்கள் புறப்பட்டன. நடுவழில் 7 விமானங்கள் அழிந்து போயின. எஞ்சியுள்ள ஐந்து வெடி விமானங்களே லக்ஷியம் இருக்குமிடத்திற்குச் சென்று அதற்கு சேதத்தை விளைவித்துவிட்டு திரும்பிவர்தன. இம்மாதிரி மகத்தான விமானப் படையெடுப்பு இதற்குமுன் எந்த சமயத்திலும் இருந்த

தில்லை. இவ்விமானப்பகுதி அரும், பெரும் தீரச் செயல்களைச் செய்தனவென்றும், அதில் உயிர் துறந்தவர்கள் யாவரும் நல்ல பிரக்யாதி அடைந்துவிட்டார்கள் என்றும் பிரதம மந்திரி தன் தேசத்தார்களின் சார்பாக அதைப் புகழ்ந்து விமானப் படைக்கு ஒரு செய்தி விடுத்தார். இதுதான் இரண்டாவது விமானப் படையெடுப்பு.

## ஜப்பான்மீது படையெடுப்பு.

ஜப்பான் தீவிலுள்ள பல முக்கியமான இடங்களை அமெரிக்க பாம்பர் விமானங்கள் தங்கள் விமானதளத்திலிருந்து வெகுதூலைவரை பறந்துசென்று தாக்கின. இதுதான் மூன்ருவது விமானத் தாக்குதல். அப்பொழுது டோக்கியோ, யோகஹாமா, நாகோயா, கோப் முதலியவைகள் பலமாகத் தாக்கப்பட்டன. இனி அடுத்துவரும் தாக்குதல்கள் மிகவும் கடுமையாக இருக்குமென்றும் எதிர் பார்க்கப்படுகிறது. படையெடுப்பு பூரா விவரங்களும் நமக்கு இன்னும் தெரிய வில்லை. ஆனால் அதில் விளைந்த பயன்கள் மனதிற்கு அதிக திருப்தியை யளிக்கின்றன. டோக்கியோ நகரத்தில் யாவும் கடுதாசி வீடுகளே. எரிகுண்டுகள் போடுவதற்கு அவைகள் சரியான லக்ஷியம் என்று சொல்லப்படும். அது வாஸ்தவம்தான். ஏன் அங்குள்ள வீடுகள் யாவும் கடுதாசி போன்ற மிகவும் லேசான சாமான்களைக்கொண்டு கட்டப்படவேண்டும்? அந்நாடுகளில் மிகவும் கெட்டியாக வீடுகள் கட்டப்பட்டால், அடிக்கடி பூகம்பங்கள் ஏற்படுவதினால் வீடுகள் அழிந்துவிடும். அது காரணத்தினால் உயிர்ச்சேதம் ஏற்படாமல் தடுப்ப தற்காக இம்மாதிரி லேசான சாமான்களைக்கொண்டு வீடுகள் கட்டப்படுகின்றன. அதனால் பூகம்பத்தால் ஏற்படும் சேதத்தைப்போலவேதான் விமானத் தாக்குதலி லும் சேதம் ஏற்படும். இதையெல்லாம் எதிர்பார்த்துத்தான் ஜப்பான் விமானத் தாக்குதலுக்கு முன்னெச்சரிக்கையாக நடந்துகொள்ளவேண்டும். திரும்ப அவர் களுக்கு நேரிடக்கூடியதை எண்ணி அவர்கள் உஷாராகவேண்டும்.

## ஜெர்மனியின் மீது விமானத் தாக்குதல்கள்.

இம்மாதிரி விரோதி பிரதேசங்களில் நேசதேச விமானங்கள் வெகுதூலைவரை சென்று தாக்கிவந்தன. இதை விடு பிரான்ஸின்பேரில் அநேகமாக தினசரி விமானப் படையெடுப்பு ஏற்பட்டது. இன்னும் ஜெர்மனியை இரவில் பாம்பர் விமா னங்கள் போய் தாக்கிவருவதும் குறைந்தபாடில்லை. இவ்விரண்டு படையெடுப்பு களின் பயனாக பிரான்ஸிலும், மேற்கு ஜெர்மனியிலும் லுப்ட்வாபியின் பெரும் பகுதியை நிறுத்திவைக்க வேண்டியதாயிற்று.

இதைப்போலவே மால்டா தீவினர் ஜெர்மன் விமானப் படையெடுப்புகளை சமாளித்துக்கொண்டு சில மாதங்கள் வரை எதிரியின் விமானப் படைக்கு அலைக்கழிவும், சோர்வும் விளைவித்து ஒரு பெரிய ஜெர்மன் விமானப் பகுதியை அங்கேயே நிறுத்திவிட்டனர். இதன் பயனாக ருஷ்யப் போரில் அப்பகுதி ஈடுபட முடியாமல் போய்விட்டது.

இந்நிலைமையில் பிரிடனும், அதன் சாம்ராஜ்யமும் ஐரோப்பாவில் ஜெர்மனியைத் தாக்க மறு போர்முனையை ஏற்படுத்துவதைக் காட்டிலும் அதிக பயன் கொடுக்கக்கூடிய விதமாக ருஷ்யாவுக்கு உதவியளித்துவருகின்றன. மறு போர்முனை ஏற்படுத்தினால் இப்பொழுது கப்பல்களில் ஏற்றியனுப்பப்படும் யுத்த தளவாடங்கள், இன்னும் முக்கியமான சாமான்கள் இவைகளில் பெரும்பாலும் அங்கு அழிந்துவிட நேரிடும். ஆதலால் நேசநாடுகள் ஒன்றுசேர்ந்து புதிதாக ஏற்படும் போர்முனைகளுக்கு துருப்புகள் ஏற்றிச்செல்லவும், ருஷ்யா, சைனா இவைகளுக்கு யுத்த தளவாடங்கள் ஏற்றிச் செல்லவும் போதுமான கப்பல்களைச் சேகரம் செய்யும்வரை, இப்பொழுதுள்ள நிலைமைக்குத் தக்கபடி நாம் இம்மாதிரி சிக்கனமான முறைகளைக் கையாளுவோம். மிஸ்டர் ஹாரி ஹாப்கின்ஸ் இது வகைக்கு மிகவும் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்.

## லவாலின் நடவடிக்கை.

பிரான்ஸின் அரசியலில் ஏற்பட்ட மாறுதல்களைக் குறித்து சொல்லவேண்டியது அவசியம். ஏனென்றால் இப்பூரா உலகத்திலோ அரசாங்கத்திலோ, ராணுவத்திலோ

ஏற்படும் எந்த மாறுதலும் ஏதேனும் ஒரு ராஜதந்திரத்தை முன்னிட்டுத்தான் இருக்கக்கூடும். பிரான்ஸில் தந்திரமாக லவாலே அதிகாரத்திற்குக் கொண்டு வந்தது பூராவும் ஹிட்லரின் முயற்சியேயாகும். தான் கிழக்குப் பிராந்தியத்தில் கவனத்தைச் செலுத்திவரும்பொழுது, பின்னணித் தலைமையை வகிக்க லவாலே நியமிக்க வேண்டுமென்பதே ஹிட்லரின் முக்கிய நோக்கம். ராஜத்துரோக நடவடிக்கைகளைச் செய்ய, பிரெஞ்சுக் கப்பற்படையின் பகுதிகளை இந்த பின்னணித் தலைவன் ஹிட்லருக்கு உதவியாக அனுப்பினால், எதிரிக்கு ராணுவபலம் அதிகரித்து அபாயம் ஏற்படலாம். ஆனால் முக்கியமான பெரிய பிரெஞ்சுக் கப்பல்கள் பழுதுபட்டுப்போய் யுத்தத்திற்கு லாயக்கில்லாமல் கிடக்கின்றன. மேலும் பிற்பட்டு வட ஆபிரிக்கா, பிரான்ஸ் இவைகளிலுள்ள துறைமுகங்களுக்கு அனாவசியமாகச் சென்றதின் பயனாகவும் அவைகள் லாயக்கில்லாமல் கிடக்கின்றன. ஆனால் சிறு யுத்தக் கப்பல்கள் முக்கியமாக நீர்மூழ்கிகள் மத்தியதரைக்கடலில் இருக்கும் அச்சுநாட்டுக் கப்பற்படையுடன் சேர்ந்தால், அதற்கு பலம் அதிகரிக்கும். ஏனென்றால் மத்தியதரைக்கடலில் இதாலிய நீர்மூழ்கிகள் 47-க்குக் குறைவில்லாமல் மூழ்கடிக்கப்பட்டு அதனடியில் கிடக்கின்றன.

---

## வான் பேபன் அங்காராவுக்குத் திரும்பினான்.

## ஜெர்மன் தாக்குதல் எந்த திசையில் ஏற்படும்.

## துருக்கி பிரிடனின் சிநேகத்தையே ஆதரிக்கிறது.

(லியோனார்ட் கிரஷான் எழுதியது.)

நாளாக ஆக ஜெர்மனியரின் வசந்த காலத்தாக்குதல் காலம் நெருங்குகிறது. கொஞ்சகாலமாக ஜெர்மானியர்கள் என்ன செய்வார்கள் என்பதைப்பற்றி சொல்லி வந்த ஜோஸியம் பொய்யாகிக்கொண்டே வருகிறது. ராஜீய வட்டாரங்களில் இதைப்பற்றி யோசிப்பதில் ஒன்றும் குறையவில்லை. அமைதி இருப்பது போல் தோன்றுவதில் ஜெர்மானியர்கள் வேறு எங்கேயோ பரபரப்பாக இருக்கிறார்கள். அதற்கு அறிகுறிகள் இருக்கிறதா என்பதை ஆவலுடன் கவனித்து ஒப்பிட்டுப் பார்க்கப்படுகின்றன.

### பேபன் துருக்கியைப்பற்றி குறைகூறுகிறான்.

இப்பொழுது பேபன் திரும்பி வந்த பிறகும் துருக்கியின் கொள்கை மாறினதாகத் தெரியவில்லை. வர்த்தக ஒப்பந்தத்திலுள்ள கஷ்டங்களைக் குறித்து துருக்கி அயல்நாட்டு மந்திரியைச் சந்தித்துப் பேசும்பொழுது பேபன் புகார் செய்ய முயன்றது உண்மை. துருக்கியின் வியாபாரம் உண்மையில் குறைவாகத்தான் இருக்கிறது. வியாபாரம் நடக்கிறதோ என்று கூட சந்தேகமாகித்தானிருக்கிறது. அதற்கு துருக்கியர்கள் தான் ஜவாப்தாரியென்று அவன் பழி சுமத்த எத்தனித்தான்.

அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையான கொள்கைகளின்படிகூட ஜெர்மானியர்கள் நடக்கவில்லையென்பதை வான் பேபனுக்குச்சுட்டிகாட்டப்பட்டது. அந்த ஒப்பந்தத்தின் முதல் கொள்கையானது முதலில் ஜெர்மானியர்கள் துருக்கிக்கு சாமான்கள் அனுப்பவேண்டும். அவைகள் வந்த பிறகுதான் அந்தப் பொருள்களின் விலைக்குத் தக்கபடி ஜெர்மனிக்குத் துருக்கியிலிருந்து அனுப்புவதற்குப் பொருள்கள் தயாராகயிருக்கும்.

துருக்கியில் ஜெர்மானியர்கள் ஏராளமாக புகையிலை வாங்கியிருக்கிறார்கள். அவர்கள் வாங்கிய சாமான்களில் புகையிலைதான் முக்கியமான வஸ்து. ஆனால் அவைகளைக் கப்பலில் ஏற்றிச்செல்ல அவர்களால் முடியவில்லை. அதற்கு மேலே சொல்லப்பட்ட காரணமொன்று. மேலும் கருங்கடல் பாதை சாவதானமில்லை. ஐரோப்பாவுக்கு ரயில்வே போக்குவரத்து வசதியில்லை, ஏனென்றால் ஸிம்பளான்

பாதையிலிருந்த மாரிட்ஸா பாலங்கள் உடைக்கப்பட்டு, இன்றும் அப்படியே கிடக்கின்றன. ஜெர்மனியில் கடைகளுக்கு முன்னால் புகையிலை வாங்க வெகு நேரம் காத்திருந்தும் ஸிகெரட்டுகளுக்காகக் கொடுக்கப்படும் திட்டச்சீட்டுகளி லிருந்து ஐந்து முதல் பத்து ஸிகெரெட்டுகளுக்கு மேல் வாங்க முடியாமல் ஏமாந்துபோய்விடுகிறார்கள்.

## உறுதிமொழி கோரப்படுகிறது.

அதே சந்திப்பில் துருக்கியை ஜெர்மனி தாக்கப்போவதில்லை என்று பேபன் உறுதி சொன்னது மட்டுமல்ல. பல்கேரியாவை துருக்கி தாக்கப்போவதில்லை என்று உறுதி சொல்லும்படி பேபன் பல்கேரியா சார்பாக கேட்டுக்கொண்டா னென்று அங்காராவில் விஷயம் தெரிந்த ராஜீய வட்டாரங்களில் சொல்லப் படுகிறது.

அச்சு நாடுகளுடன் சேர்ந்த சிறு நாடுகளைத் தன்னுடன் சேர்த்து யுத்தம் புரியச் செய்வதில் ஜெர்மானியர்களுக்கு இன்னும் சில கஷ்டங்கள் இருப்பதாகத் தெரிகிறது. அந்தச் சிறு நாடுகள் ஜெர்மனியுடன்கூட ஒத்துழைக்க விரும்பி னாலும், விரும்பாவிட்டாலும் ஜெர்மனியுடன்தான் அவை இருக்கவேண்டுமென் பதில் சந்தேகமில்லை. இது மாதிரியாக பல்கேரியாவை துருக்கி தாக்க எதிர் பார்த்ததாகவே சொல்லி பல்கேரியா பாசாங்கு செய்துவருகிறது. அங்காராவி லிருக்கும் பல்கேரியா மந்திரி சில காலமாக நகரத்தைச் சுற்றிவந்து பல்கேரி யாவைத் துருக்கி தாக்காமலிருக்கும்படி உறுதி கேட்டுவருகிறார். ஆனால் அவனுக்குக் கிடைத்த உறுதிப்பாடுகள் அவனுக்குத் திருப்தியளிக்கவில்லை. ஆத லால் வான் பேபன் அவனுக்குப் பதிலாக அனுப்பப்பட்டிருக்கிறான்.

சென்ற வாரத்தில் நான் சந்தித்த ராஜீய வாதிகள் எல்லாம் வருகிற வசந்த காலத்திலும், கோடைகாலத்திலும் துருக்கி தாக்கப்பட மாட்டாது என்று நிச்சய மாகச் சொல்லுகிறார்கள். ருமேனியாவிலும் இதே விதமாகச் சொல்லப்படுகிறது. ஆனால் ருமேனியர்கள் சொல்லும் காரிய காரணங்களில் சில பாகங்கள் திருப்தி கரமாக இல்லை.

## வரப்போகும் ஜெர்மன் தாக்குதல்.

ருமேனியாவிலிருந்து சமீபத்தில் வந்திருக்கும் சில வர்த்தகர்கள் ஜெர்மன் தாக்குதல் ருஷ்யாவைக் குறித்தும், விசேஷமாக தெற்கே காகஸஸ் பக்கம்தான் இருக்குமென்று துருக்கியர்களுக்குச் சொல்லியிருக்கிறார்கள். எச்செலவிலும் ருஷ்ய எண்ணெயைக் கைப்பற்ற ஜெர்மானியர்கள் விரும்புகிறார்கள். ருமேனி யாவில் உற்பத்தியாகும் எண்ணெய் 54,00,000 டன்களிலிருந்து 60,00,000 டன்கள் வரைதான் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. இந்த எண்ணிக்கை உத்தி யோக முறையில் 1939-ல் சொல்லப்பட்டது. கிணறு தோண்டும் கருவியில்லா ததினால் இதற்குமேல் அவர்களால் எண்ணெய் எடுக்க முடியவில்லை.

இப்பொழுது ஜெர்மனிக்கு ஆகாய விமானத்திற்கு வேண்டிய பெட்ரோல் அதிகம் தேவையில்லை. ஆனால் கைத்தொழில் வேலைகளுக்கும், நீர்மூழ்கிகள் செல்லுவதற்கும் வேண்டிய எண்ணெய்தான் மிகவும் முக்கியமாக இருக்கிறது. அத்தகைய எண்ணெய் வேறு வகையில் தயாரிக்க முடியாததினால் அவர்களிடம் இருப்பு குறைந்துகொண்டு வருகிறது. அமெரிக்கக் கப்பல்கள் திட்டம் பூராவும் அமுலுக்கு வரும்பொழுது ஜெர்மானியர்கள் அவர்களின் நீர்மூழ்கிகளைக்கொண்டு தான் அமெரிக்கக் கப்பல்களைத் தாக்கவேண்டும். இந்த நிலைமையில் அவர்களுக்கு எண்ணெய் குறைந்துவிட்டால் அவர்களால் ஒன்றும் செய்யமுடியாது. அமெ ரிக்கக்கப்பற்படை அடுத்த மாரி காலத்திலோ, அல்லது வசந்த காலத்திலோ தயாராகி விடும் என்று நாம் எதிர்பார்க்கலாம். ஆகவே சரத்காலத்திற்கு முன் காகஸஸை அடைந்து வசந்த காலத்திற்கு முன் எண்ணெய்க் கிணறுகளை தயார் செய்வது அவசியமென்று ஜெர்மானியர்கள் அவசரப்படுவதை நாம் பார்த்து வருகிறோம்.

ருஷ்யாமீது படையெடுப்பில் ஜெர்மானியர்களுக்கு அபஜெயம் உண்டானல் தான் இராக்கிலுள்ள எண்ணெய்க் கிணறுகளை ஜெர்மானியர்கள் கைப்பற்றிக் கொள்வதற்காக துருக்கிமீது பாய நேரிடுமென்று ருமேனியர்கள் சொல்லி வருகிருர்கள். இப்பொழுது ருஷ்யப் போர்முனையில் ஜெர்மானியத் துருப்புகள் எதிர்த்து முன்னேற முடியாமல் போனல், அவர்கள் சைனியங்கள் முற்றிலும் முறியடிக்கப்பட்டு அடுத்த மாரி காலம் முடியும் வரை காத்திருக்க வேண்டி வரும் என்று அங்காராவிலுள்ள எல்லா துருக்கிய வட்டாரங்களிலும் சொல்லப்படுகிறது. ராணுவ நடவடிக்கை மூலமாகப் பார்த்தாலும் பெரிய யந்திர சாதனப்படைகளை தெற்கு ருஷ்யாவில்தான் அணிவகுப்பதற்கு சாதகமாயிருக்குமென்று தெரிகிறது.

ஸைபிரஸின் பேரில் கிரீட்டிலிருந்து தாக்குவதற்கு சந்தர்ப்பம் இருப்பதாக சில வட்டாரங்களில் சொல்லப்படுகிறது. இம்மாதிரி நடக்குமா என்று இப்பொழுது சுமார் இரண்டு மாதமாக அங்கு விவாதிக்கப்பட்டு வருகிறது. அப்படி ஜெர்மானியர்கள் ஏதாவது தாக்கினல் அவர்களுக்கு விபரீதங்கள் ஏற்படும். ஸைபிரஸைத் தாக்குவதில் அவர்களுக்கு ஒருவித பயனும் ஏற்படாது ஸிரியாவைத் தாக்கினல் அங்கே எதற்கும் தயாராகயிருக்கிற புதிய பிரிடிஷ், நேசதேசத் துருப்புகளை அவர்கள் சந்திக்க நேரிடும். அங்காராவிலுள்ள பிரிடிஷ் ராணுவ வட்டாரங்களில் இப்படி ஜெர்மானியர்கள் தாக்குவதாய் இருந்தால் நேசதேசத்தார்கள் போட்டிருக்கும் திட்டம், ராணுவ கோட்பாட்டின்படி ஒரு தீரச்செயல் என்றும், இதுவரை ஜெர்மனி ஒரு விதமான தீரச்செயலும் செய்ய இறங்கவில்லை என்றும் சொல்லப்படுகிறது.

## துருக்கியின் நடுநிலைமை.

இதன் மத்தியில் துருக்கியின் அரசியல் நிலைமை அமைதியாக இருக்கிறது. வான் பேபனின் பேரில் வெடிகுண்டுபோட முயற்சித்தவர்களுடன் சேர்ந்த குற்றவாளிகளின்பேரில் அங்காராவில் விசாரணையை நாம் கவனித்து வருகிறோம். அந்த விசாரணை முடிய இன்னும் கொஞ்சகாலம் பிடிக்கும், ஏனென்ருல் வாரத்திற்கு ஒரு நாள்தான் விசாரணை நடக்கிறது. ஓய்வு நேரங்களில் துருக்கி பாஷையில் எழுதப்பட்டிருக்கும், சாக்ஷி வாக்குமூலங்களும், தஸ்தாவேஜுகளும் எதிரிகளுக்கு அனுகூலமாக இருக்கவேண்டி ருஷ்ய பாஷையில் மொழிபெயர்க்கப்படுகின்றன. அக்குற்றத்தில் சம்பந்தப்பட்ட ருஷ்யர்கள் இவைகளைக்கொண்டு தாங்கள் நிரபராதிகள் என்று ருஜு செய்துகொள்ளக்கூடும்.

இந்த விசாரணையினல் ராஜீயப் போக்கில் பயன் இருக்குமா என்பதைக் குறித்து இப்பொழுது சொல்ல முடியாது. துருக்கியர்கள் இந்தக் கேஸை பாரபக்ஷமன்னியில் பார்த்து வருகிருர்கள். துருக்கி பின் நடுநிலைமைக் கேற்றவாறு இந்த சம்பவத்தில் தனக்கொன்றும் பொறுப்பில்லை என்று காட்டுவதற்காகவே முக்கிய கவனத்தைச் செலுத்துகிறது. இக்கேஸைப்பற்றி ஜெர்மானியர்கள் ருஷ்யர்களுக்கு விரோதமாகவும் ருஷ்யர்கள் ஜெர்மானியர்களுக்கு விரோதமாகவும் இரு கக்ஷியினரும் பிரசாரம் செய்துவருகிருர்கள். ஆனல் துருக்கிப் பத்திரிகைகளில் இதைப்பற்றிய விமர்சனம் ஒன்றும் இல்லை. இதுவரையில் நடந்த விசாரணையில் துருக்கிய எதிரிகள் சொன்ன வாக்கு மூலங்களிலிருந்து ஜெர்மானியர்களுக்குத் திருப்தி ஏற்படுகிறது. இருந்த போதிலும் ருஷ்யர்களுக்கும், துருக்கியர்களுக்கும் உள்ள பாந்தவ்யத்திற்கு யாதொரு குறைவும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

## கைதிகளை மாற்றிக்கொள்ளுதல்.

துருக்கி முற்றிலும் நடுநிலைமையாக இருப்பதில் பெரிய சாதகம் ஏற்பட்டிருக்கிறது. அதாவது செவ்வாய்க்கிழமை தினம் ஒரு பிரிடிஷ் சிகிச்சை வசதியுள்ள கப்பலும், இதாலிய சிகிச்சை வசதியுள்ள கப்பலும் ஸ்மிர்ணு துறைமுகத்திற்கு வந்தன. மறுநாள் அவ்விரு கப்பல்களிலிருந்த மிகவும் காயமடைந்த கைதிகளும் அவர்களுக்கு பாதுகாப்பாளர்களும் மாற்றிக்கொள்ளப்பட்டனர். இதுதான்

முதல் தடவை. இன்னும் அநேக தடவைகள் இம்மாதிரி நடைபெறும். இந்த யுத்தத்தின் மத்தியில் இத்தகைய நல்ல காரியத்திற்கு கிழக்கு மத்தியதரைக் கடலில் ஸ்விட்ஸர்லாந்துக்கு சமானமாக துருக்கியை பொருக்கி எடுத்திருப்பது பாராட்டத்தக்கது.

ஆறு மாதங்களாக துருக்கி அரசாங்கம் மூலமாகவும் சர்வ தேச செஞ்சிலுவை சங்கம் மூலமாகவும் அந்தந்த அரசாங்கங்களுடன் பேச்சு நடைபெற்று வருகிறது. இஸ்தான்புல் 'வாடான்' பத்திரிகைக்கு ஸ்மிரானுவிலிருக்கும் நிருபர், "இந்த நல்ல காரியத்திற்கு துருக்கி நகரமான ஸிமிரினு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. இதற்காக ஸ்மிரினு வாசிகள் பெருமையடைகிறார்கள்" என்று தன் பத்திரிகைக்கு கேபிள் மூலம் செய்தி அனுப்பினார்.

### வருங்கால நிலைமையைப்பற்றியப் பிரச்னை.

இனி எப்படி சம்பவங்கள் நேரிடுமென்பதை விவரிப்பதோ முன்யோசனை யாகச் சொல்வதோ கடினமானது. இது முதல் சர்வதேச சம்பவங்களைக் குறித்துச் சொல்வதைப்பற்றி வெகு ஜாக்ரதையுடன் இருக்கவேண்டும். ஆனால் நமக்கு வேண்டியதென்னவென்றால், துருக்கி யுத்த ஆரம்பகால முதற்கொண்டு அந்நிய நாட்டுக் கொள்கையை மாற்றாமலிருக்கிறதும், இனியும் மாற்றாமலிருக்கப் போவதும்தான். இப்படித்தான் சில நாட்களுக்கு முன் ஒரு ராஜீய நிபுணர் சொன்னார். அடுத்த சில வாரங்களில் உலகம் பூராவும் அங்காராவின்பேரில் கவனத்தைச் செலுத்தும். துருக்கியும் அடுத்த கோடை காலம் முழுவதும் ஒருவித மாறுதலும் இல்லாமல் இருக்கும்போல் தெரிகிறது.

---

## மோட்டார் தொழிற்சாலைகளில் யுத்த சாமான்கள் செய்யப் படுகின்றன.

## டெட்ராயிட்டில் ஏற்பட்ட மாறுதல்.

டெட்ராயிட் என்ற பெரிய அமெரிக்க நகரில் முன்பு மோட்டார்கள் செய்யப் பட்டு வந்தன. தற்போது அங்கே ஏராள யுத்த சாமான்கள் செய்யப்படுகின்றன. இங்கே 10 லக்ஷம் ஆட்கள் வேலைசெய்துவருகின்றனர். ரீடர்ஸ் டைஜெஸ்டு (Reader's Digest) என்ற பத்திரிகையில் "யந்திர உலகத்தில் இது ஒரு விசேஷ சம்பவம்" என்று மார்க்ரோஸ் என்பவரால் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

இதற்கு, ஐந்து வருஷ திட்டங்களைப் போட்டுக்கொண்டு ருஷ்யாவில் நிகழ்ந்த தொழிற்சாலை முன்னேற்றத்தை ஒப்பிடலாம். டெட்ராயிட் நகரில் பலவருஷங்களாக நடந்துவந்த மோட்டார் தொழிற்சாலை சாமான்களை அப்புறப் படுத்திவிட்டு, நுட்பமான யந்திரங்களை யெல்லாம் பிளந்து எறிந்துவிட்டு யுத்த சாமான்களைச் செய்வதற்கு வசதி செய்யப்பட்டது.

மோட்டார் கட்ட உதவும் யந்திரங்கள் வெய்யிலிலும் பனியிலும் தூக்கி எறியப்பட்டன. கட்டி முடிக்கப்பட்டு வெளிநாட்டிற்கு ஏற்றிச் செல்லமுடியாத அழகிய மோட்டார்களும் வெளியே கிடக்கின்றன.

### மாறிய தோற்றம்.

முக்கியமாக சகதி முதலியவைகளில் வேகமாகச் செல்லக்கூடிய டாங்கிகள் செய்யப்படுகின்றன. இவைகளுக்குத் தேவையான பீரங்கிகளும் செய்யப்படு கின்றன. தினம் டாங்கிகள் கட்டப்பட்டு தெருவுகளில் ஓட்டம் விட்டுப் பார்ப்பதால் டாங்கிகளின் குணம் மாடுகளுக்குக்கூட பழக்கமாகிவருகிறது.

டெட்ராயிட்டில்தான் சாமான்களின் உற்பத்தியை அதிகமாகச் செய்யக் கூடிய தந்திரமுள்ள நிபுணர்கள் தயாராகின்றனர். புதிய புதிய தந்திரங்களைக் கண்டுபிடிக்கக்கூடிய சாமர்த்தியம் இவர்களுக்கு உண்டு. நேர்த்தியாகவும் துரித மாகவும் செய்வதுதான் நோக்கம். இவ்வருஷத்திற்குள் 11 லக்ஷக் கோடி டாலர் மதிப்புள்ள யுத்த சாமான்கள் கட்டிமுடிக்கப்படும்.

**கஷ்டமான வேலை,**

டெட்ராயிட்டிலுள்ள தொழிற்சாலைகளை யுத்த சாமான்களைச் செய்வதற்கு லாயக்காக மாற்றும்போது 50 இஞ்ஜினியர்களும் மானேஜர்களும் ஒரு மாதம் வரை இரவு 12 மணிவரை ஈடுபட்டனர். இதுவரையில் ஜெர்மனியில்கூட காண முடியாத விதமாக ஏராள சாமான்களைச் செய்வதற்கு லாயக்காக தந்திரங்கள் கையாளப்பட்டன. டெட்ராயிட்டில் நடந்ததைப் பார்த்தால் ஜெர்மனியில் நடப்பது ஒரு பெரிய விஷயமல்ல.

டெட்ராயிட்டில் விமான என்ஜின்களும், ராணுவ வண்டிகளும், ஸ்கவுட் மோட்டார்களும், 6 சக்கரமுள்ள கவசம்பூண்ட வண்டிகளும், யந்திர பீரங்கி களும், தாணுக விமானங்களைச் சுடும் பீரங்கிகளும், கப்பல் யந்திரங்களும் கட்டப் படுகின்றன.

சீக்கிரமாக யாவும் நடைபெறுகின்றன. புதிய தொழிற்சாலைகளில் ஒருபுறம் வேலையாட்கள் உள்ளே வருவதும் மறுபுறம் சாமான்கள் வெளியே போவதுமாக இருக்கிறது. 125 மைல் நீளமுள்ள குழாயில் இரும்பு உருக்கப்பட்டு வெடிகுண்டு கள் செய்யப்படுகின்றன.

125 பாகங்களுள்ள ஒரு பீரங்கி கட்டபோடப்பட்ட திட்டத்திற்கு ஆறு மாதம் முன்னாடியே கட்டி முடிக்கப்பட்டது.

---

# ஐரோப்பிய சிறிய ஸமஸ்தானங்களின் கதி.

"யேனி ஸபா" (Yeni Sabah) பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டது.

நார்வேயில் ஜெர்மனி படையெடுத்த பிறகு க்விஸ்லிங் (Quisling) குக்குக் கெட்ட பெயர் வந்தது. இனிமேல் அவன் தாய் நாட்டுத் துரோகி என்றே பரம் பரையாக அழைக்கப்படுவான். அடிமையாக்கப்பட்ட தன் நாட்டிற்கே அவன் பிரதம மந்திரிப் பதவியை ஏற்றுக்கொண்டதில் தன் கௌரவத்தைத் தானே குறைத்துக்கொண்டான். அவன் ஜெர்மனிக்குச் சாதமாக ருஷ்யப் போர்முனை யான கொலைக்களத்திற்கு, நார்வே தேசத்து இளைஞர்களை அனுப்புவதற்கான ஏற் பாடுகளை செய்துவருகிறான். இவ்விஷயத்தைப் பாராட்டி ஜெர்மன் பத்திரிகை களில் வெளியிடப்பட்டிருக்கிறது. இது விவரத்தைக் கேட்ட மாத்திரத்திலேயே ருஷ்யப் போர்முனையிலுள்ள ஜெர்மன் சைனியங்கள் குதூஹலிக்கின்றன.

ஐரோப்பா சிற்றரசு நாடுகளிலுள்ள ஜனங்களை -அச்சுநாட்டு வல்லரசுகள் கொடுமையாக நடத்துவதற்கு இது சமீபத்தில் ஏற்பட்ட ஒரு உதாரணம். இதைக் கண்டு மற்ற நாடுகள் பாடங்கற்றுக் கொள்ளவேண்டுமென்பது வீண் பேச்சு. ஏனென்றால் இதைக்கண்டு பயனடைவதற்கு ஐரோப்பாவில் வேறு சிறிய ஸமஸ் தானங்களே கிடையாது. ஐரோப்பாவிலுள்ள எல்லா சிற்றரசு நாடுகளும் வெடி குண்டு பலாத்காரத்தினால் அடிமையாக்கப்பட்டன. இப்பொழுது அவை கஷ்டத் தையும், துன்பத்தையும் அடைந்திருக்கின்றன. அவைகளுக்கு முன் யோசனை இல்லாததும், கோழைத்தனமும் தான் இதற்குக் காரணம்.

யுத்தம் ஆரம்பித்தபொழுது ஐரோப்பிய சிற்றரசு நாடுகளெல்லாம் யுத்தத்தில் சேராமலிருப்பதற்கே வழிபார்த்தன. அது இயற்கையானது தான். மனித யத்னத்திலும் அது தான் சாத்தியம். பிறர்தேசங்களை க்கைப்பற்ற ஆசை

கொள்ளாத நாடுகள் யுத்தத்தில், ஈடுபட விரும்பமாட்டா. ஆனல் தாய் நாட்டை காப்பாற்றுவதற்காக யுத்தத்தில் சேரவேண்டியதும் அவசியம். நியாயமும் கூட. ஆனல் யுத்தம் ஆரம்பித்த பொழுது ஐரோப்பிய சிறு நாடுகளேயே பரிசுகளாக அச்சுநாட்டு வல்லரசுகள் எண்ணினர்கள் என்று அவைகள் தெரிந்து கொள்ளவில்லை. அப்படித்தெரிந்து கொள்ள இஷ்டப்படவும் இல்லை. என்ன செலவு நேரிட்டாலும் சரி, அவர்கள் ஸ்வதந்திரம் அழிந்து போனலும் சரி, அவர்கள் சண்டைசெய்ய விரும்பவில்லை. அவர்களுக்கு சண்டை செய்ய பலமுமில்லையென்றும், சிறிய நாடுகளென்றும், இந்த அரக்கர்களுக்குள் நடக்கும் போரில் முதல் தாக்குதலிலேயே தாங்கள் அழிந்து போவது நிச்சயமென்றும் நம்பினர்கள். அவர்களுக்கு சந்தேகமாயிருந்த போதிலும், மூடநம்பிக்கை கொண்டிருந்தார்கள். அதாவது அவர்கள் நடுநிலைமையாக இருந்தால் யுத்தம் என்ற புயல் காற்றில் அகப்படாமல் தப்பலாம் என்று எண்ணியிருந்தார்கள். தங்கள் வயல்கள், வீடுகள், அழியாமலும், உயிர்ச்சேதம் ஏற்படாமலும் தடுத்து விடலாம் என்று எண்ணினர்கள். சுருங்கச்சொல்லில் நல்ல சௌகரியத்துடன் செல்வந்தர்களாக இருக்க விரும்பினர்கள். அவர்கள் வாழ்க்கை எவ்வளவு கேவலமாயிருந்தாலும் சரி, அவர்களுடைய ஸ்வதந்திரமும், உரிமைகளும் அழிந்து போனலும் சரி, அவர்களுக்குள்ள சந்தோஷமும், வசதியும் குறைவுபடாமல் இருந்தால் அவ்வாழ்க்கையை நடத்தத் தயாராக இருந்தார்கள்.

ஐரோப்பிய சிற்றரசு நாடுகளில் சில நீங்கலாக மற்றவை இந்த வழியைக் கடைப்பிடித்து நடந்துவந்திருக்கின்றன. நடுநிலைமையாக இருக்கவே அவ்வரசாங்கங்கள் எண்ணி கண்களை இருக மூடிக்கொண்டு வெளியே நடக்கும் விஷயங்களைக் கவனியாமல் நடுநடுங்கிக்கொண்டிருந்தன. ஆனல் அவைகளும் பழாக்கப்பட்டன. முதலில் பொதுமக்கள் தங்கள் உரிமைகளையும் ஸ்வதந்திரத்தையும் இழந்தார்கள். அடுத்தபடியாக சுகமும் போய்விட்டது. இப்பொழுது பசிக்கொடுமையால் வருந்துகிருர்கள். ஏனென்ருல் அவர்களின் உணவை அவர் ஜெர்மானியர்களுக்குக் கொடுக்கவேண்டியிருக்கிறது. கட்டாயவேலை செய்ய நிர்ப்பந்திக்கப்படுகிருர்கள். அந்நிய தேசங்களுக்குத் தொழில் செய்ய அனுப்பப்படுகிருர்கள். ஏனென்ருல் அவர்களை ஜெயித்தவர்களுக்காக ஆயுதங்கள், வெடிமருந்து முதலியவை அதி துரிதமாக உற்பத்தி செய்யவேண்டியிருக்கிறது. இது மாத்திரமல்ல. அவர்கள் ஏற்கனவே யுத்தத்தில் ஈடுபட பயந்துகொண்டிருந்தார்கள். அப்படி பயந்தும் யுத்தம்வராமல் தடுப்பதற்கு முடியவில்லை. யுத்தப் பேய் அவர்களைப் பிடித்துவிட்டது. அதாவது அவர்களுக்கு போரிடவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. அவர்களின் தாய் நாட்டின் ஸ்வதந்திரமும், சுயேச்சை அதிகாரமும் அழியப் பார்த்திருந்த பொழுது அந்த தேசத்தார்கள் தங்கள் கடமையைச் செய்யாமல் இருந்தார்கள். ஆனல் அப்பொழுது தங்களை அடிமையாக்கினவர்களின் தேசத்தைக் காப்பாற்றவும் அவர்கள் தலைமையின்கீழ் தூர தேசங்களில் போய் சண்டை செய்து இறக்கவேண்டிய கதி அவர்களுக்கு ஏற்பட்டுவிட்டது.

அச்சுநாட்டு வல்லரசுகளுடன் சிநேக முறையிலிருக்க தீர்மானித்திருந்த ஐரோப்பிய சிற்றரசு நாடுகள் ஒவ்வொன்ருகப் போரில் இறங்கும்படியும் ஆயிற்று. இதுவரையில் அச்சுநாட்டின் சார்பாக பல்கேரியாயும், நார்வேயும் சண்டையில் சேர அழைக்கப்படவில்லை. ஆனல் ருஷ்யப் போர்முனையோ பெரும் பூதமாக இருக்கிறது. மனிதர்களை விழுங்கி வருகிறது. ஆதலால் போர்வீரர்களை அக்கொலைகளத்திற்கு அனுப்பவேண்டியிருக்கிறது. இது காரணத்தினல் க்விஸ்லிங் நார்வேயில் பிரதம மந்திரியாக நியமிக்கப்பட்டிருக்கிருன். ஜெர்மன் அரசாங்கம் அங்கு இனி அவசியமில்லாததால் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டுவிடும். இந்த நார்வே ஒப்பந்தக்காரன் ஜெர்மனி சார்பாக நடக்க ஒப்புக்கொண்டிருக்கிருன். அவனுடைய எஜமானனைத் திருப்தி செய்வதற்காக தன் தேசத்தார்களை ருஷ்யப் போர்முனையில் முன்னணியில் வைக்க ஏற்பாடு செய்துவருகிருன்.

ஆகவே, அச்சுநாட்டினர் கொடுப்பதாகச் சொல்லும் ஸ்வதந்திரம் என்னவென்று இப்பொழுது நன்ருய்த் தெரிகிறது. முதலில் சிநேகிதம் செய்வதாக

உறுதி சொல்லுகிறார்கள், ஸ்தோத்திரம் செய்கிறார்கள், புகழ்கிறார்கள். பிறகு அவர்கள் அந்நாட்டை பலாத்காரமாகக் கைப்பற்றுகிறார்கள். அந்த நாட்டிலுள்ள பொருளாதாரங்களும், தொழிலாளிகளும் அச்சு நாடுகளின் ஆதிக்கத்தின் கீழ்ப் போய்ச்சேருகின்றன. பிறகு அச்சு நாட்டின் சாதகத்திற்காக வேலை செய்ய அந்த நாடு நிர்ப்பந்திக்கப்படுகிறது. கடைசியாக அந்த நாட்டிலுள்ள ஜனங்களும் போர்முனைக்கு அனுப்பப்படுகிறார்கள். அவர்களுக்கு ஜெயித்த நாட்டில் ஒரு பகுதியைக் கொடுப்பதாக வாக்குறுதி அளிக்கப்படுகிறது. அல்லது அவர்கள் போர் செய்ய வேண்டியிருக்கிறது. அச்சுநாட்டு வல்லரசுகளும் தங்கள் சூழ்ச்சிகளை நேரிலோ, அல்லது தங்கள் அதிகாரத்திற்குட் பட்டுவரும் தேசத்துரோகிகளின் மூலமாகவோ செய்து முடிக்கிறார்கள்.

ஐரோப்பிய சிற்றரசு நாட்டினர் தங்கள் நடுநிலைமையை பாதுகாத்துக் கொள்ளமுடியவில்லை. வெளி நிர்ப்பந்தத்திற்குப் பயப்படாமலிருக்க ஒருவித பரித்தியாகமும் செய்ய அவர்கள் தயாராக இல்லை. தங்கள் தாய் நாட்டையும் ஸ்வதந்திரத்தையும் சுயேச்சை அதிகாரத்தையும் காப்பாற்றிக்கொள்ளச் சக்தியிருப்பதாக அவர்களுக்கு தங்களிடம் நம்பிக்கையில்லை. ஆதியிலேயே எதிரிகளுடன் போர்செய்ய வேண்டிய கடமையைச்செய்யாமல் விட்டுவிட்டார்கள். அவர்கள் இழந்த எல்லாப் பயன்களையும் இப்பொழுது அச்சுநாட்டினரிடமிருந்து அடைய எதிர்பார்க்கிறார்கள். இப்படி இருந்தும் அவர்களுக்கு என்ன லாபம் கிடைத்திருக்கிறது? ஒன்றுமில்லை.

---

## ஜப்பான் ஆக்கிரமித்த பிரதேசங்களிலுள்ளவர்களைக் குறித்த தகவல்.

(ஸ்ரீ-தர்பாரவர்கள் பிரஸ் கம்யூனிகே *R. C. A.-10,—4128 of 1942*).

பர்மாவிலும் தூரக்கிழக்கிலும் ஜப்பான் ஆக்கிரமித்த பிரதேசங்களில் இருக்கும் பிரிடிஷ் ஆளுகைக்குட்பட்ட ஐரோப்பியர்கள் உள்பட எல்லா பொதுமக்களைக்குறித்த தகவல்கள் இந்தியன் ஓவர்ஸீஸ் இலாக்காவில் (Indians Overseas Department) கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும். ராணுவப்படை, விமானப்படை, கப்பற்படை இவைகளில் சேர்ந்தவர்களைக் குறித்த தகவல்கள் இந்தியப்பாதுகாப்பு இலாகாவில் (Defence Department) கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும்.

2. ஜப்பான் ஆக்கிரமிக்காத பிரதேசங்களிலுள்ள ராணுவத்தைச் சேராத பொதுமக்கள் சம்பந்தமாக பஸிபிக் வட்டாரத்தில் பிரிடிஷ் சாம்ராஜ்ய நாடுகளிலிருக்கும் இந்தியப் பொதுமக்களைக் குறித்த தகவல்கள் இந்தியன் ஓவர்ஸீஸ் இலாகாவில் (Indians Overseas Department) கேட்டுத் தெரிந்துகொள்ளலாம். அந்தப்படி பிரிடிஷ் சாம்ராஜ்யத்தில் சேராத அன்னிய நாடுகளிலிருக்கும் இந்தியப் பொதுமக்களைக் குறித்த தகவல்கள் அயல்நாட்டு விஷய இலாகாவில் (External affairs Department) கேட்டுத் தெரிந்துகொள்ளலாம். பஸிபிக் வட்டாரத்தில் பிரிடிஷ் சாம்ராஜ்ய நாடுகளிலிருக்கும் இந்தியரல்லாத மற்ற பிரிடிஷ் பிரஜைகளைக் குறித்த தகவல்களையும், அன்னிய நாடுகளிலிருக்கும் மேற்கண்ட பிரிடிஷ் பிரஜைகளைக் குறித்த தகவல்களையும் அயல்நாட்டு விஷய இலாகாவில் (External affairs Department) கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

---

# விளம்பரம்.

இந்தியா கவர்ன்மெண்டார் தயாரித்த

## ஸிவில் பாதுகாப்பு

என்ற ஒரு யுத்தப் படம்

(தமிழில்)

புதுக்கோட்டை வெஸ்ட் டாக்கீஸில்

மே மீ 22உ முதல் 25உ முடிய காண்பிக்கப்படும்.

இப்படத்தை

புதுக்கோட்டை

தேசிய யுத்த முன்னணி நிலயம்

பொது ஜனங்களுக்கு சிபார்சு

செய்கிறது.

# புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

1942— மணி.

## பிரஸங்கம் 95—(2-வது பிரிவு).

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மே | ...16, சனிக்கிழமை ... | முனிஸிபல் ஆபீஸ் | ... | மாலை | 6.30 |
| | 17, ஞாயிற்றுக்கிழமை. | வயலோகம் | ... | ,, | 6.00 |
| | | குடுமியாமலை | ... | ,, | 6.30 |
| | 18, திங்கட்கிழமை ... | நல்லூர் | ... | ,, | 6.00 |
| | | மண்டையூர் | ... | ,, | 6.30 |
| | 19, செவ்வாய்க்கிழமை | நச்சாந்துபட்டி | ... | ,, | 6.00 |
| | | விராச்சிலை | ... | ,, | 6.30 |
| | 20, புதன்கிழமை ... | வெங்களூர் | ... | ,, | 6.00 |
| | | கோனாபட்டு | ... | ,, | 6.30 |
| | 21, வியாழக்கிழமை .. | பனையப்பட்டி | ... | ,, | 6.00 |
| | | ராங்கியம் | ... | ,, | 6.30 |
| | 22, வெள்ளிக்கிழமை... | கொடும்பாளூர் | ... | ,, | 6.00 |
| | | விராலிமலை | ... | ,, | 6.30 |

## பிரஸங்கம் 96—(3-வது பிரிவு).

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 23, சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... | மாலை | 6.30 |
| | 24, ஞாயிற்றுக்கிழமை. | ஆலங்குடி | ... | ,, | 6.00 |
| | | கோட்டைக்காடு | ... | ,, | 6.30 |
| | 25, திங்கட்கிழமை ... | அன்னவாசல் | ... | ,, | 6.00 |
| | | கீழக்குறிச்சி | ... | ,, | 6.30 |
| | 26, செவ்வாய்க்கிழமை. | ராமச்சந்திரபுரம் | ... | ,, | 6.00 |
| | | ராயவரம் | ... | ,, | 6.30 |
| | 27, புதன்கிழமை ... | மழையூர் | ... | ,, | 6.00 |
| | | கரம்பக்குடி | ... | ,, | 6.30 |
| | 28, வியாழக்கிழமை ... | வாளரமாணிக்கம் | ... | ,, | 6.00 |
| | | ஏம்பல் | ... | ,, | 6.30 |
| | 29, வெள்ளிக்கிழமை... | பொ. புதுப்பட்டி | ... | ,, | 6.00 |
| | | வேந்தம்பட்டி | ... | ,, | 6.30 |

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,500—16-5-42.